மகிழ்ச்சி

RA PUBLI
MAY 195

அ 3 ணா

ஐப்பசி.

'மகிழ்ச்சி' அன்பர்களுக்கோர் நற்செய்தி!

வரும் கார்த்திகை இதழ் முதல்

"மகிழ்ச்சி"

விலை 4 அணுவாக

உயர்த்தப்பட்டிருக்கிறது.

அநேக நேயர்கள் *மகிழ்ச்சியை* மாதம் இருமுறையாக மாற்றவேண்டுமென்று வற்புறுத்தியுள்ளார்கள்.

ஆனுல் அதற்கு சந்தர்ப்பமும், வசதியும் தற்சமயம் இல்லாததால் **கூடிய பக்கங்களுடன்** அதிகமாக கதை, கட்டுரைகளுடன் வெளியிட முடிவு செய்துள்ளோம்.

நேயர்களுக்கு இச் செய்தி மகிழ்ச்சியளிக்கும் என்று நம்புகிறேம்.

இப்பொழுதுள்ள சந்தாதார்களுக்கு புதிய விலைக்குத் தக்கபடி கணக்கிட்டு மாற்றிக் கொள்ளப்படும்.

கார்த்திகை முதல்

வருட சந்தா (தபாலில்) ரூ. 3—0—0

ஆசிரியர், **மகிழ்ச்சி.**

சிவ. ப. ராஜரத்தின நாடார் & பிரதர்ஸ்,

நகை & இரத்தின வியாபாரம்,

தூத்துக்குடி பிராஞ்சு ஆரம்ப வைபவ அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான நந்தன ஸ்ரீ ஐப்பசிமீ 4உ (20-10-52) திங்கட்கிழமை காலை 10மணிக்கு மேல் 10-30 மணிக்குள் தூத்துக்குடி கிரேட்காட்டன் ரோடு, 23 நிர் கடையில் எங்கள் காசுக்கடை பிராஞ்சு புதுக் கணக்கு எழுதி ஆரம்பம் செய்வதால் தாங்கள் அவ்வைபவத்திற்கு வந்திருந்து ஆசீர்வதித்து எங்களை ஆதரிக்கும்படியாக பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

ரிஜிஸ்டர்டு எவரெஸ்ட்வைரங்களும், ரங்கூன் கமலங்களும், அசல் ஜாதி புஷ்பராகக்கற்களும், ஜாதிப் பச்சை, சிவப்பு, நீலம் முதலிய கலர்க்கற்களும், அசல் வைரங்களும், ஷை கற்கள் பதித்த நகைகளும் கிடைக்கும்.

எங்கள் நகைப்பட்டறையில் ஆர்டருக்கு எல்லாவித நகைகளும் கியாரண்டியுடன் குறித்த காலத்தில் உயர்ந்த வேலைப்பாடுடன் செய்து கொடுக்கப்படும்.

தங்கள் மேலான ஆதரவை
விரும்பும்,
சிவ. ப. ராஜரத்தின நாடார்
& பிரதர்ஸ்,
இரத்தினவியாபாரம், விருதுநகர்.
பிராஞ்சு:
கீழாவணிமூலவீதி, மதுரை.

26 MAY 195
MADRAS

மகிழ்ச்சி

சீர்திருத்த மாத இதழ்

ஆசிரியர்: நா. சதானந்தம்
விருதுநகர்.

தி. ஆ. 1983—ஐப்பசி 1.
ஆண்டு 4] 17-10-52 [மாதம் 5

பொருளடக்கம்

என். எஸ். கிருஷ்ணன் பேட்டி 2

முள்—தொடர்கதை
—ஏ. வி. பி. ஆசைத்தம்பி 9

தெறித்த முத்துக்கள் . 15

காதற்கடல்—தொடர்கதை
விருதை மகிழ்நன் 17

இல்லற வாழ்வு இன்பமடைய
ராஜாஜீ 25

நான் ஏன் அழகாய்ப்
பிறந்தேன்?—கடவுள் 30

மகிழ்ச்சி அழைக்கிறது
—நா. புகழேந்தி 35

இன்பஅலை-பி.எஸ் மணியன் 36

இதுநிஜமா?—வாகன் 40

கல்யாணம் பண்ணிப்பார்
திரைப்பட விமர்சனம் 41

சினிமா வேண்டுமா?
வேண்டாமா? ஏன்? 44

ஞா. சோ. போட்டி 7 47

கதைகளில் வரும் பெயர்கள்
கற்பனையே.

விருதுநகர் நியூ முத்துவில்

கண்ணாம்பா, அஞ்சலிதேவி, ரேலங்கி,
லிங்கமூர்த்தி, ஸ்ரீராமமூர்த்தி நடித்த

ஜெமினி ரிலீஸ்

ஏழை உழவன்

சமூக சீர்திருத்த தமிழ்ப்படம்

17—10—52 தீபாவளி முதல்
வெற்றிகரமாக நடைபெறுகிறது!

லைன், கலர், ஆப்டோன்

பிளாக்குகள்

சினிமா சிலைடுகள்
ரப்பர் ஸ்டாம்புகள்
செய்யுமிடம்

ராஜன் & கோ., சிவகாசி.

20 MAY 1955

கருநாகம் விஷம் கக்குகிறது!

கலைவாணர் N. S. கிருஷ்ணன் பேட்டி

28—9—52 ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு, விருதுநகரில், திருநெல்வேலி ஜில்லா போர்டு தலைவர் **திரு. டி. எஸ். ஆதிமூலம் அவர்கள்** தலைமையில், ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப் நிதிக்காக நடைபெற்ற "இந்தனார், காந்தி மகான் சரித்திரம் வில்லுப்பாட்டு" நிகழ்ச்சிக்காக வந்திருந்த நகைச் சுவை அரசு, கலைவாணர் **திரு. என்.எஸ். கிருஷ்ணன் அவர்களை** முன்கூட்டியே கண்டுபேச வேண்டு மென்ற அவாவுடன் மாலை 6-30 மணிக்குச் சென்றேன்.

கலைவாணரின் கருத்து நிறைந்த பேச்சு, பாடல்களைக் கேட்க ஆடவரும், பெண்டிரும், இளைஞர்களும் சாரை சாரையாக டிக்கெட்பெற்று மேடையின்முன் முண்டியடித்துச் சென்று உட்கார்ந்து ஆரவாரம் செய்துகொண்டிருந்தனர். நிதிக் கமிட்டியார் சகல மக்களும் கேட்டு இன்புறும் வகையில் ஏக கட்டணமாக எட்டு அணாவையே வைத்திருந்தது அனைவருக்கும் பெரு மகிழ்ச்சியைக் கொடுத்திருந்தது.

மேடையின் பின்னால் அமைக்கப் பெற்றிருந்த, அலங்காரம் செய்து கொள்ளும்இடத்திற்குச் சென்றேன் கிருஷ்ணன் அவர்கள் அதுவரை வரவில்லை. எனவே அவர் வரவிற்காகக் காத்திருந்த அவரது குழுவினர்களில் ஒருவரான சினிமா நடிகர் திரு. சி. எஸ். பாண்டியனை அறிமுகம் செய்துகொண்டு சிறிது நேரம் சினிமா விஷயமாகப் பேசிக் கொண்டிருந்தோம் மணியும் 7ஐ நெருங்கிக்கொண்டிருந்தது. அப்பொழுது அலங்காரம்செய்துகொள்ளும் இடத்திற்கு வெளியே சிறு ஆரவாரம் கேட்டது. அடுத்த நிமிடம் மறைக்கப்பட்டிருந்த கிடுகுகள் இரண்டு பிரிக்கப்பட்டு ஒரு ஆசாமி உள்ளே நுழைந்துகொண்டிருந்தார். திகைப்புடன்கவனித்தோம். வேறு யாருமில்லை, நகைச்சுவை அரசர் தான் பலத்த சிரிப்புடன் தலையை நிமிர்த்தினார். சட்டென்று எனக்கு அவர் சுதந்திர தினத்தன்று ரேடியோவில் நிகழ்த்திய "வள்ளுவம்" கதையில்அவர்கூறிய வார்த்தைகள் நினைவுக்கு வரவே, "என்ன, வள்ளுவத்தில் கூறிய கொல்லைப்புற பாதைபோல, கிடுகைப் பிரித்துக் கொண்டு நுழைந்துவிட்டீர்களே!" என்றேன்.

"பிறகு என்ன செய்வது? இல்லாவிட்டால் ஸ்டேஜின்முன்பக்கம் போய் சுற்றியல்லவா வரவேண்டும். பெரிய பெரிய மனிதர்களெல்லாம் இப்படி வரும்போது......" என்று அவருக்கே உரிய நகைத்தொனியுடன்கூறிக்கொண்டே அங்குகிடந்த நாற்காலியில் அமர்ந்தார்.

நானும் அவர் அருகில் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்து "பிரயாணம் சௌகரியமாக இருந்ததா?" என்று நலம் விசாரித்துக்கொண்டு

மெதுவாக கையில் சுருட்டி வைத்திருந்த 1952 செப்டம்பர் 21வ 'கல்கி'யை விரித்து 5வது பக்கத்தைப் புரட்டி "இதைக் கவனித்தீர்களா?" என்றேன்.

"எது? கல்கியில் 'போகிறார்கள்! வருகிறார்கள்! பயனற்றுப்போகிறார்கள்!' அதுதானே! இது வெளியாவதற்கு முன்பே, வரப்போகிறது என்று எனக்குத் தெரியுமே!"

"அப்படியா? இதுபற்றி உங்கள் கருத்து என்ன?"

"கருநாகம் விஷத்தைக் கக்குகிறது"

"இதற்குச் சரியான பதில் கொடுக்கவேண்டுமல்லவா?"

"சந்தேகமில்லாமல்......"

"சகலபத்திரிகைகளுக்குமே ஒரு அறிக்கை கொடுத்தால் நல்லது என்று கருதுகிறேன்"

"அப்படித்தான் யோசித்துள்ளேன். பாருங்களேன்: 'அயல் நாடு சென்று திரும்பிவந்து சேர்ந்த கலைஞர்களால் நாட்டுக்கும், நாட்டுக் கலைகளுக்கும், அவர்களுக்குமே பயன்விளைவதில்லையாம். அதனால் தீமைகூட உண்டாகிறதாம்' எவ்வளவு எகத்தாளம் கவனித்தீர்களா?

தமிழ்நாட்டில் சிறப்புடன் நடைபெறும் பெரிய பத்திரிகை ஒன்றின் ஆசிரியர், காந்தி ஞாபகார்த்த ஸ்தாபியின் நிதிக்காக என்னுடைய நிகழ்ச்சிகளை பலமுறை நிகழ்த்தி நிதி சேர்க்க என் உதவியை நாடிப் பெற்றவர், மற்றும் பல நிகழ்ச்சிகளுக்கெல்லாம் எனக்கு முன்னிடம் அளித்தவர், என் படத்தை அட்டையிலும், உள்ளேயும் போட்டுப் பிரபலமாக எழுதியவர், நான் வரிவிடாது தொடர்வாகப் படிக்கும் பத்திரிகையின் ஆசிரியர்—இன்று கூறுகிறார் தீமைகூட உண்டாகிறது என்று.

நான் ரஷ்யா சென்று திரும்பிய பின்னும், அதற்கு முன்னும் நான் செய்த தீமைகள் என்ன தெரியுமா? நூற்றுக்கணக்கான பள்ளிகளுக்கும் பலஸ்தாபனங்களுக்கும் இதுபோன்ற உதவிநிகழ்ச்சிகள் செய்துகொடுத்ததுதான். நான் நிகழ்த்திய வில்லுப் பாட்டுகளால் பல சிறு கிராமங்களிலும், நகரங்களிலுமுள்ள ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் உயர்தர ஆரம்பப் பள்ளிகளாகவும், உயர்தர ஆரம்பப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் உயர்ந்துள்ளன. இதுதான் நான் செய்த தீமை!"

"தள்ளுங்கள் பச்சோந்திகளை" என்றேன். ஆனால் அவர் ஆத்திரம் அடங்கவில்லை.

"இதுமட்டுமா? 'ருஷியாவுக்குப் போய்வந்தவர்கள் தங்களை உடனே நாட்டின் மாபெருந்தலைவர்களைவிட மேலான அரசியல் தலைவர்களாக நினைத்துக்கொண்டார்கள். அந்த ஹோதாவில் பேச ஆரம்பித்துவிட்டார்கள்' என்றும் எழுதியிருக்கிறார்.

உண்மையாகவே நான் ரஷ்யா சென்று திரும்பியதை இவர் சாதாரணமாகவே எண்ணியிருந்திருக்கிறார். ஆனால் திரும்பி வந்தபின் மதுரையிலும், சென்னை கடற்கரையிலும் நிகழ்ந்த வரவேற்புக்கூட்டத்தின்போது லக்ஷக்கணக்கானமக்கள் கூடினார்கள் என்பதை அறிந்த பின்பும், நாங்கள் நேரில் கண்டவற்றை அப்படியப்படியே கூறிவருவது தெரிந்தபின்பும்தான் ஒருவித மன மாற்றம் உண்டாகியிருக்கிறது.

அத்துடன் காங்கிரஸ் சார்பாக எலெக்ஷனில்வேறு நிற்க பல அநு கள் நடைபெற்றன. ஆனல் நான் என் கலைத்தொண்டுக்குப் பங்கம் வரும் என்ற காரணத்தாலும், கை தூக்கிப் பொம்மையாக இருக்க விரும்பாததாலும்மறுத்துவிட்டேன்

உங்களுக்குத்தெரியும் 'கல்கி'யை (விரலைக் காண்பித்து) ஆள் இப்படி இருப்பார்! என் பேச்சுக்கே இப் படியென்றால், உண்மையிலேயே நான் தலைவனானல் அவர் உயிர் அப்படியே போனாலும்போய்விடும். அப்படி எதுவும் நிகழ்ந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் நான் தலைவனாகவில்லை"

"ஆமாம் இவ்வளவு கோபம் உங் கள்மீது அவருக்கு வரக் காரணம்? ரஷ்யா சென்றுவந்ததுதானா?"

"அதுமட்டுமல்ல, இவ்வாண்டு சுதந்திரதின ரேடியோநிகழ்ச்சி'வள் ளுவத்தில்' ஒரு வார்த்தை 'கொல் லைப்புற வாசல் வழியாக வந்து சட்டம் வேறையா பேசுகிறாய்?' என்றேன். இதுதான் அவருக்குச் 'சுர்' என்று தைத்துவிட்டது"

"சீனு செல்வதற்கு டி. கே. ஷண்முகம், பகவதிக்கு அனுமதி கிடைக்கவில்லையாமே?"

"யார் சொன்னது? பாஸ்போர்ட் எல்லாம் வந்தாகிவிட்டது. ஆனல் இவர்கள்தான் போகவில்லை. இதற் கும் இந்தக் 'கல்கி'தான் காரணம். அவர்களிடம் சென்று 'இதற்குமுன் ரஷ்யா சென்று திரும்பியவர்கள் நாட்டிற்குக் கேடுசெய்யும் வகையில் பேசித் திரியும்போது இவர்களுமா செல்லுகிறார்கள்' என்று ராஜாஜி

D. S. ஆறிமுலம் * N. S. கிருஷ்ணன் * மகிழ்ச்சி சதானந்தம்

மிகவும் வருந்துவதாகவும், நம் சர்க்கார் மூலமாகவே கலைஞர்களை வெளிநாடு அனுப்ப ஏற்பாடுகள் நடைபெற்று வருவதால், அப்பொழுது அவசியம் இவர்களையும் அனுப்பி வைக்கலாம் என்று ராஜாஜீ கருதுவதாகவும் ஓதிவிட்டார். அத்துடன் வெளிநாடு சென்றவர்கள்குறித்து கல்கியில் எழுதப் போவதாகவும் கூறியிருக்கிறார். இதைக் கேட்டு இந்தப் பூணூல் போடாத பிராமணர்களும் தலையை அசைத்துவிட்டார்களாம். இதுதான் நடந்தது''

''சரிதான் பெரிய இடத்துச் சமாச்சாரமெல்லாம் இப்படித்திரை மறைவு நாடகமாகத்தான் இருக்கும் போலிருக்கிறது. ஆமாம் சென்னையில் நடைபெற்ற தமிழ்த்திருநாளில் நீங்கள் கலந்துகொண்டதாகத் தெரியவில்லையே?''

''தமிழ்த் திருவிழா என்ற பேர் வையில் கட்சிக் கூட்டமல்லவா நடத்தினார்கள். தமிழர்விழா என்றால் தமிழ் அறிஞர்கள், கலைஞர்கள் முதலானோர்களுக்கு அழைப்பு இல்லாமலா இருக்கும்?''

''அப்படியா? மிகவும் வருந்த வேண்டிய விஷயம்''

''வருந்த வேண்டாம். உண்மையான தமிழர்திருநாள் கொண்டாட ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறேன். திருவள்ளுவர் திருநாளை மகாநாடு மாதிரி கூட்டிப் பிரமாதமாகக் கொண்டாட, தமிழ் அறிஞர்கள், கலைஞர்கள் பலரைக் கலந்து ஆவன செய்யத் தூண்டிக்கொண்டிருக்கிறேன்''

''மிக்க மகிழ்ச்சிகரமான செய்தி. அத்துடன் எனது அவாவும் ஒன்று; ரேடியோவில் நிகழ்த்திய ''வள்ளுவத்தை'' இனி 'நந்தனார்'போல ஊர் ஊருக்கு நிகழ்த்தவேண்டும். அரியகருத்துக்கள் அதில்பொதிந்து கிடக்கின்றன''

''அதற்கும் ஏற்பாடுகள் செய்து கொண்டுதான் இருக்கிறேன். வள்ளுவத்தை நான் முதலில் எழுதப் பட்டபாடு! ஒரே திகிலாகக்கூடப் போய்விட்டது. சுதந்திரதின ரேடியோ நிகழ்ச்சி ஒன்றிற்கு ரேடியோ அதிகாரிகள் கேட்டார்கள். நானும் ஒப்புக்கொண்டு 'வள்ளுவம்' என்று பெயர் கொடுத்து விட்டேன். ஆனால் என்ன எழுதுவது, எப்படி எழுதுவது என்று ஒன்றும் ஓடவில்லை. அப்பொழுது குற்றாலத்தில் இருந்தேன். இரண்டு மூன்றுஎழுதினேன். ஆனால் ஒன்று கூட மனதிற்குத்திருப்தியாகஇல்லை உடனே அவற்றைக் கிழித்தெறிந்து விட்டேன். நாள் நெருங்கிக்கொண்டே வந்தது. ஒருநாள் இரவு பூராவும் விழித்து எழுத உட்கார்ந்து விட்டேன். எழுதியதும் மனதிற்கு சற்று திருப்தியாகப்பட்டது. உடனே அதைஎடுத்துக்கொண்டு ரஸிகமணி டி. கே. சி.யிடம் ஓடினேன். அவர் படித்துவிட்டு 'இதுவரை இவ்வளவு கருத்துநிறைந்த, ரஸிப்புமிக்கதைச் சுவைக்கவில்லை' என்று உற்சாகமூட்டினார். அப்புறம்தான் பூர்ண திருப்திஏற்பட்டது எனக்கும்''

''நீங்கள்தான் விடாமுயற்சியின் உருவமாச்சே! உங்கள் 'பணம்' எவ்வளவு தூரத்தில் இருக்கிறது? தீபாவளிக்கு வெளிவருமா?''

''முக்கால்வாசிக்குமேல் முடிந்து விட்டது. தீபாவளிக்கு வராது. பின்னால்தான்''

“ஆள் மிகவும் இளைத்துப்போய் விட்டீர்களே”

“என்ன செய்வது? படஷூட்டிங்குடன் இப்படி விரும்பிக் கூப்பிடுமிடங்களுக்கெல்லாம் மாதத்தில் பலநாள் கார் பிரயாணம் செய்து தீமை(?) விளைவிக்கவேண்டியதிருக்கிறதல்லவா?”

இதற்குள் மணி எட்டை எட்டிவிடவே, நிகழ்ச்சிக்குத் தயார்செய்துகொள்ள விடைபெற்றுக்கொண்டார்.

எட்டினால் குடுமி; எட்டாவிட்டால் காலைப் பிடிக்கும் ‘கல்கி’க் கும்பல்களின் லீலாவிநோதங்களை எண்ணியபடியே நிகழ்ச்சியைக் கவனித்துக்கொண்டிருந்தேன். திரு. கிருஷ்ணன் அவர்கள் ‘நான்கண்ட ரஷ்யா’ என்ற நிகழ்ச்சியின்போது, அநேகமாக என்னுடன் பேசிக்கொண்டிருந்த ‘கல்கியாரின் திருவிளையாடல் புராணங்கள்’ பூராவையுமே மக்கள்முன் சமர்ப்பித்துவிட்டார்.

அட்டைப்படம்: பிரபல ஹிந்தி நடிகை திருமதி காமினி கெளசல்

கிடைக்கப்பெற்ரும்

திராவிடக் கூட்டரசு
(வார இதழ்)
ஆசிரியர்: சி. இலக்குவனர்
M. A., M. O. L.,
கரந்தை, தஞ்சாவூர்.
தனி இதழ் அணு 2
ஆண்டுக்கட்டணம் ரூ. 5
பெரியார் இராமசாமியின் குறிக்கோள்களைப்பிரதிபலிக்கும் ஏடாகத் தோன்றியுள்ளது.

ராமபாணம்	0—1—0
டிங்குராங்கா	0—1—0
வாயாடி	0—1—0
சைனுவாலா	0—1—0

'ஜீவன்' எழுதிய மேற்கண்ட குழந்தைகளுக்கான புத்தகங்கள் நான்கும் கிடைக்குமிடம்:
ரதிப் பதிப்பகம்,
127, தெற்கு ஆவணி, மதுரை.

அடுத்த இதழில்!

முன்னாள் "சண்டமாருதம், ஊழியன், தமிழன்" முதலிய பத்திரிகைளின் ஆசிரியராக இருந்து, தற்சமயம் பத்திரிகை உலகிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டிருப்பவரும், 'நல்லதம்பி' படக் கதைக்கு அறிஞர் அண்ணுதுரைக்கு துணையாக வசனம் தொகுத்தவருமான திருவாளர் **S. K.** சாமி அவர்கள், மனோதத்துவ உணர்ச்சிகளைச் சித்திரிக்கும், மனிதவாழ்க்கையின் பழக்க வழக்கங்களை எடுத்துக் காட்டும் அற்புத நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட கருத்தோவியத்தையும், திருமதி **T. A.** மதுரம் அவர்கள் தனது ரஷ்யப் பிரயாணத்தைப்பற்றிய வர்ணனையையும் வரும் "மகிழ்ச்சி" கார்த்திகை இதழில் உங்களுக்கு அளிக்கிறார்கள்.

"மகிழ்ச்சி" தனிப்பிரதி அணு 4

ஆண்டுச் சந்தா (தபாலில்) ரூ. 3

கட்டுரைப் போட்டி 1 பரிசு ரூ. 3

"இரவு" என்னும் தலைப்பில் மகிழ்ச்சி மூன்று பக்கங்களுக்குள் முடியக்கூடியதாக கட்டுரை ஒன்று 31—10—52க்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்க வேண்டும். கவரின்மீது **கட்டுரைப் போட்டி 1 'மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்.'** என்று குறிப்பிட வேண்டும். நீண்ட கட்டுரைகள் கவனிக்கப்படமாட்டாது. பிரசுரமாகும் கட்டுரைக்கு ரூபாய் மூன்று பரிசளிக்கப்படும்.

—ஆசிரியர்

[கடந்தகதை: ஜானகி அடுத்தவீட்டு ராமரைக் காதலித்து, காதல் கைகூடாதோ என்ற நினைப்பில் மறக்க நினைக்கிறாள்; மறக்க முடியவில்லை! ஆனால்...]

ராமன்:

ஆனால் என்ன? எனக்கு மனம் இருக்கும்போது யார் என்ன சொல்வது? இரு மனமும் ஒன்றுபட்டபின்பு 'ஆனால்' என்ற வார்த்தையே அவசியம் கிடையாதே!

பூனை குறுக்கேவந்துவிட்டால் அபசகுனம் என்று ஆஸ்திக அன்பர்கள் கருதுகிறார்கள்! இதை அறிஞர்கள்ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆனால்...பேசுகிறபொழுதோ, எழுதுகிறபொழுதோ 'ஆனால்'என்ற வார்த்தை குறுக்கே வந்துவிட்டால் ஏதாவது ஒருகுறையை சுட்டிக்காட்டுவதாகத்தான் இருக்கும்.

ஜானகி என்னை மனப்பூர்வமாகக் காதலித்தும், 'ஆனால்'என்று நீட்டுவதின் அர்த்தம் என்ன? அபசகுனத்தைப்போல ஏதோ ஒரு குறை இருக்கிறது என்பது தானே? என்னைக் காதலிக்கிறவள் எதற்காக கலங்கவேண்டும்?

ஜானகி ஏழையாய் இருந்தால் என்ன? நான்மட்டும் கோடீஸ்வரனா? ஏதோ என் தாயார் சாகும்போது, என் மாமாவிடம் என்னைக் காப்பாற்றும்படி கேட்டார்களாம்! அதனால்தான் மாமா என்னை ஆதரித்துவருகிறார்! மற்றப்படி நானும் ஜானகியைப் போல அனாதைதான்; ஆதரவற்ற ஏழைதான்.

பலர் மாடிவீட்டுமனிதர்களைக் கண்டால் மயங்கிவிடுகிறார்கள்! ஆனால் ஜானகிமருண்டுவிட்டாள். மாடிவீடும் மண்வீடும் மனிதன் ஏற்படுத்திக்கொண்டதுதான். இந்தஉலகத்தில் அகிலத்தைக்கட்டியாளும் அரசனுக்கும், அலைந்து திரியும் ஆண்டிக்கும் சொந்த

மானது ஆறடி மண்தான். இது என் ஜானகிக்கு தெரியவில்லை?

பணம் நிலையானதல்ல என்பதும், செல்வத்தின் லட்சியம் செய்வதுதான் என்பதும் ஜானகிக்குத் தெரியாத உண்மையா? என்னிடம் இருக்கும் பணத்தை வைத்து, என் குணத்தை நிர்ணயிப்பது சரியா?

இந்தக் காலத்திலே பணக்காரன் என்றாலே ஓர் வெறுப்பு இருக்கிறது! பணக்காரர்களை ஒழித்துக்கட்டவேண்டும் என்று சிலர் கூச்சல் போடுகிறார்கள். அவர்கள் ஒழிவதுபற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் .. பணக்காரனை ஏழையாக்குவதிலே எந்த நன்மையும், எவருக்கும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஏழையைப் பணக்காரனாக்கினால் அவனாவது ஆனந்தமாக வாழ்வான்.

வெறும் பணக்கார ஒழிப்பினால் மட்டும் பொதுவுடைமையை ஸ்தாபிக்க முடியாது! பெரிய ஆலை வைத்து ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கும் தனிப்பட்ட பணக்காரனை ஒழித்துவிடுவதால் வேலையில்லா திண்டாட்டந்தான் ஏற்படும். ஆனால், பொருளாதார நெருக்கடியற்ற ஸ்திரமான அரசாங்கம் பொதுவுடைமையை புகுத்தநினைத்தால் நிச்சயம்ஸ்தாபிக்கமுடியும்.

சட்டத்தின் உதவியில்லாமலே ஏழைபணக்காரனாகிறான்; பணக்காரன் ஏழையாகிறான். ஆனால் தாழ்ந்த ஜாதிக்காரன் உயர்ந்த ஜாதிக்காரனாகவும், உயர்ந்த ஜாதிக்காரன் கீழ்ஜாதிக்காரனாகவும் சட்டத்தினால் மட்டுந்தான் முடியுமேதவிர, மற்ற வழிகளில் சமத்துவமடையமுடிவதேஇல்லை பணக்காரத்வத்தைவிட ஜாதித்வந்தான் சமதர்மத்திற்கு பெரிய முட்டுக்கட்டையாக இருக்கிறது. பொதுவுடமை விரும்பிகள் முதலில் ஜாதிகளை ஒழிக்க முன்வரவேண்டும்.

ஒரு ரூபாய் லாட்டரி போட்டியில் ஏழைகூட லட்சாதிபதியாகிவிடமுடியும்; ஆனால் ஒருவனிடம் பணம் இருக்கிற காரணத்திற்காக அவனை மேல்ஜாதிக்காரன் என்று யாரும் மதித்துவிடுவதில்லை; ஒப்புக்கொள்வதுமில்லை. தீண்டாமை என்பது ஏழைகளுக்கு மட்டுமல்ல, கீழ் ஜாதிப் பணக்காரர்களையும் அது பாதித்தது. இதிலிருந்து பார்த்தால் பொருளாதார சமத்துவத்தால் மட்டும் பொதுவுடமையை ஸ்தாபிக்க முடியாது என்று நன்கு விளங்கும். பொதுவுடமை பூக்க ஜாதிமுறைகள் பொசுக்கபபட வேண்டும்.

ஜாதி என்பது வளர்ந்திருக்கிற நாய்வால்! அதை சிலர் மட்டை வைத்துக் கட்டி சீர்திருத்த நினைக்கிறார்கள்! ஆனால் உண்மையான சமத்துவம்நிலவவேண்டுமானால், சட்டம் என்ற கத்தி கொண்டுதான் ஜாதி என்ற நாய்வாலை நறுக்கி எடுக்கவேண்டும்!

இல்லாவிட்டால் சமத்துவத்திற்கும் இடமில்லை; காதலுக்கும் இடம் இருக்காது.

காதலும் பொதுவுடமைப் பொருள்தான். காதலை அடைவதற்குப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகூட முட்டுக்கட்டையாக இருப்பதில்லை. ஆனால் ஜாதி முறைதான் காதலுக்கு பெரும்பாலும் சாதலை உண்டாக்குகிறது. ஏழை பணக்காரப் பெண்ணை மணப்பதும், பணக்காரன் ஏழைப் பெண்ணை மணப்பதும் இன்றைய சமூகத்தில் சர்வசாதாரணமாக இருக்கிறது.

இது ஏன் ஜானகிக்கு தெரியவில்லை? அவளும் நானும் ஒரே ஜாதிதானே! நிலையில்லாத பொருளாதார வேற்றுமைக்காக ஜானகி ஏன் கவலைப்படவேண்டும்

ஏழை ஜானகியிடம் பணம் இல்லாமல் இருக்கலாம்! ஆனால் குணம் இருக்கிறது. இதைத் தவிர வேறு என்ன வேண்டும்? அழகும் அன்பும் அவளிடத்தில் இருக்கும்போது, அவள் மீது நான் ஆசைப்பட்டது தவறு?

தோட்டத்தில் அவளைக் கண்டதுமுதல் என் மனதை நான் பறிகொடுத்தேன். ஜானகியிடம் காந்தசக்தி நிச்சயம் இருக்க வேண்டும்; இல்லாவிட்டால் முதல் சந்திப்பிலேயே என் இதயத்தை அவள் கவர்ந்திருக்க முடியாது.

ஜானகியின் சேலையைக்கொடுக்கும்போது, வேண்டுமென்றுதான் மணிபர்சை வைத்துக் கொடுத்தேன். அவள் நாணயத்தைச் சோதிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் அப்படிச் செய்யவில்லை. திருப்பிக் கொடுக்க வரும்போது அவள் திருமுகத்தை மீண்டும் ஒரு முறை பார்க்கலாம் என்ற கருத்தில்தான் அவ்விதம் செய்தேன். காதல்வீணையின் உணர்ச்சி நாம்புகளை என் விரல்களால் இசைத்தேன். அதில்தான் எவ்வளவு இன்பம்!

அன்றிலிருந்து ஜானகியை ஒருநாள் பார்க்காவிட்டால், அன்று பூராவும் பட்டினி இருந்தது போன்ற நிலையில்தான் இருப்பேன். இதற்காகவே அவளைப் பார்ப்பதற்கென்றே, வழக்கமாக ஒருநேரத்தை வரையறுத்தேன். அவளும் தவறாமல் எனக்குத் தெரிசனம் கொடுத்துவந்தாள். அவளை எப்படியாவது சந்தித்துப் பேசவேண்டும் என்று என் மனம் துடியாய்த் துடித்தது. ஆனால் அவளை எப்படிச் சந்திப்பது? தோட்டக்கார தாத்தாவை அனுப்பி அவளைச்சந்திக்கலாமா என்று யோசித்தேன். ஆனால் தோட்டக்காரன் விஷயததை மாமாவிடம் சொல்லிவிட்டால்... ஜானகியும் ஏதாவது நினைத்துவிட்டால்...? காதலுக்கு மூன்றும் பேர்வழிகளின் துணை என்றைக்குமே ஆபத்தானது! இதனால் நானே அவளைக் கையால் சைகை காட்டி சந்திக்க முயன்றேன். 'பிகு' செய்வதுதான்

பெண்களின் பிறவிக்குணமாச்சே கை சைகைக்கு இசைந்துவிடுவார்களா? ஜானகி அதிலெல்லாம் என்னைச்சந்திக்கவரவில்லை. அந்தக் காலத்திலே நளனுக்கும் தமயந்திக்கும் அன்னப்பட்சி காதல்தூது சென்றதாம்! இந்தக் காலத்தில் அன்னத்தை கண்ணால்கூட பார்க்கமுடிவதில்லை! இராமாயண காலத்திலே இருந்ததாகச் சொல்லப்படும் ராமர், ஜானகிக்கு குரங்கை தூதனுப்பினாராம்! எனக்கு அப்படிப்பட்ட அனுமார்கள் கிடைக்கவே இல்லை. ஒரு கடிதம் எழுதிப்போட்டாவது அவளைச் சந்திக்க ஏற்பாடு செய்ய நானே முயன்றுவந்தேன்.

அன்று மாலை ஜானகியும், அவள் பாட்டியும் நல்ல ஆடை யுடுத்திக்கொண்டு வெளியேபுறப்பட்டார்கள். போகும்போதே என்னை ஏற இறங்கப் பார்த்து விட்டுச்சென்றாள் ஜானகி. அந்தப் பார்வை நீயும் பின்னால் வா என்று சொல்வதுபோல் இருந்தது. இந்த நேரத்தில் எங்கே போவார்கள்? பெரும்பாலும் சினிமாவுக்குத்தான் இருக்கும் என்று நினைத்து, காரில் நானும் புறப்பட்டேன்.

நான் நினைத்தது சரியாக இருந்தது. சினிமாவிலேயேதான் ஜானகி இருந்தாள். ஆனால் திரைக்குப் பக்கத்தில் தரையில் அமர்ந்திருந்தாள்ஜானகி நானோ முதல் வகுப்பில் உட்கார்ந்திருந்தேன். ஜானகிக்குப் பக்கத்தில் ஆண்கள் தரையில்போய் உட்கார்ந்து, அவளைக் கண்களிரப் பார்த்து பரவசமடையவேண்டும் என்று எனக்குஒரே ஆசைதான். ஆனால் அந்தஸ்து அதைத்தடுத்துவிட்டது காரில் வந்தவன் தரையில் போய் உட்கார்ந்தால் மற்றவர்கள்வித்தியாசமாகநினைப்பார்கள்! நானும் ஓர் ஏழையாகப் பிறந்திருந்தால் இந்நேரம் தரையிலேயே உட்கார்ந்திருப்பேன். யாரும் எதுவும் நினைக்கவும் முடியாது.

இப்படி நினைத்து நான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்போது ஜானகி என்னைத் திரும்பிப் பார்த்தாள். "எதற்காக பணக்காரனாகப் பிறந்தாய்? அதனால் தானே இந்தத் தண்டனை! நன்றாகப் பார்! சுமார் நூறு அடி நீளமுள்ள சினிமாக் கொட்டகையிலேயே பணக்காரனுக்கும் ஏழைக்கும் இடையே இவ்வளவு தூரம்என்றசொன்னால், பரந்த உலக வாழ்க்கையிலே, பணக்காரனும் ஏழையும் ஒன்றுபடமுடியுமா?" என்று என்னை அவள் கேட்பதுபோல் தோன்றியது. என் வாழ்க்கையிலே இருள் சூழ்ந்ததுபோன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது.

சினிமாக் கொட்டகை விளக்குகள் அணைந்தன. உண்மையிலேயே என்வாழ்க்கை இருண்டுவிடுமோ என்ற பயம் எனக்கு ஏற்பட்டது. ஆனால் அடுத்த நிமிடம் திரையிலே படம் ஆரம்

பித்தஒளி வீசியது. என்வாழ்க்கை இருண்டாலும் நிச்சயம் ஒளிவீசும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது.

வெளியே வானத்தில் மேகம் குமுறியது. என் உள்ளத்திலும் ஜானகியைப்பற்றிய குமுறல் இருந்துகொண்டே வாட்டியது. சினிமாப் படத்தை என்மனம் நாடவே இல்லை. என் சிந்தனை எல்லாம் ஜானகிமீதிலேயேஇருந்தது. இடைவேளையில் ஜானகி என்னை மீண்டும் திரும்பிப்பார்த்தாள்; நானும் பார்த்தேன். ஆனல் வெட்கப்பட்ட விளக்குகள் உடனே அணைந்துவிட்டன.

படம் மீண்டும் ஆரம்பமாகியது; அதே நேரத்தில் பெரிய மழையும் 'சோ'வென்று பெய்ய ஆரம்பித்தது. "மழை நன்ருக பெய்யட்டும்! ஜானகியும் அவள் பாட்டியும் வீட்டுக்குப் போக முடியாதபடிபெய்யட்டும்! அப்படிப் பெய்தால் சினிமா கொட்டகையில் இருந்தபடியே ஜானகியை பார்த்துக்கொண்டிருக்கலாம் அல்லது இருவரையும்காரிலேயே கூட்டிக்கொண்டு போகலாம்!" என்றெல்லாம் மனக்கோட்டை கட்டினேன். ஆனல் சினிமா முடிகிறபோது பாழாய்ப்போன மழை பலமாக இல்லாதபடி இலேசாகத்தான் பெய்தது.

எல்லோரும் வெளியேபோய்க் கொண்டிருந்தார்கள். ஜானகியும் ஒரு புன்னகையை வீசிவிட்டு என்னைக் கடந்து நடந்தாள். நானும் காரை ஓட்டிக்கொண்டு புறப்பட்டேன். ரோடில் ஒரேயடியாக சகதி நிறைந்திருந்தது; இருபக்கமும் ஆட்கள் சென்று கொண்டிருந்தார்கள். அதனல் காரை மெதுவாக ஓட்டினேன். என் ஜானகியை இருபக்கமும் திரும்பிப் பார்த்தேன். காணவில்லை எதிரே பெண்கள் கூட்டமாகநின்றுகொண்டிருந்தார்கள் கூட்டத்தை விலக்க, 'ஹாரன்' அடித்துக்கொண்டே சென்றேன் பெண்கள் விலகினர்கள்.

ஆ! நான் காண்பது கனவா, நினைவா? கண்ணீர்வழியும் முகத்தோடு ஜானகி காரையேபார்த்து நின்ருள்! அவள் பாட்டி கீழே கிடந்தாள். காரை நிறுத்தி கீழே இறங்கிச் சென்றேன். பாவம்! தள்ளாத வயதிலே, ஜானகியின் பாட்டி வழுக்கி விழுந்து மயங்கிக் கிடந்தாள! சிலர் அவளுக்கு முதல் சிகிச்சை செய்துகொண்டிருந்தனர். ஜானகி அழுதபடி என்னைப் பார்த்தாள். "காரில் கொண்டுவந்துவையுங்கள்; டாக்டரிடம் கொண்டுபோகலாம்" என்று என்னையறியாமலேயே என்வாய் கூறியது. பாட்டியை என்காரிலே தூக்கிவைத்தார்கள்; ஜானகியும் காரில் ஏறினள். காரை வேகமாக டாக்டர் வீட்டுக்கு ஓட்டினேன். "அழாதே ஜானகி!" என்றுமட்டும்துணிந்து ஆறுதல் சொன்னேன். அவள் பதில்பேசவே இல்லை. டாக்டர் வீடு வந்தது. நானும் ஜானகி

யும் பாட்டியை உள்ளே தூக்கிச் சென்ஞேம். டாக்டர் சிறிது நேரத்தில் மயக்கம்தெளியவைத் தார். ஜானகி மிக மகிழ்ச்சி யோடு என்னை ஏறிட்டுப் பார்த் தாள். அவள் எனக்கு நன்றி கூறுவதுபோல் தோன்றியது.

பாட்டியும்கண்விழித்து "என் னைக் காப்பாத்த கடவுளுதான் உன்ன அனுப்பிச்சிருக்காரு!" என்று சொன்ஞள். அவளைக் காரில் ஏறச்சொல்லி, நானும் ஜானகியும்சொல்ல, பாட்டி ஏறி உட்கார்ந்தாள். காரை மெது வாக ஓட்டி வந்து ஜானகி வீட் டின்முன் நிறுத்தி, பாட்டியை இறங்கச் சொன்னேன். பாட்டி இறங்கிஞள்.

ஜானகி வீட்டின் முன்பும் தண்ணீர் கட்டிக் கிடந்தது. மீண்டும் பாட்டி கீழே விழுந்து விடக்கூடாதே என்று நான் பாட்டியைத் தாங்கிக்கொண்டு நடந்தேன். ஜானகி வீட்டுப் பாதை ஓரத்திலே படர்ந்து இருந்த நெறிஞ்சிமுள் என்கால் களிலே குத்திக்கொண்டே வந் தன. காதல்பாதையிலேநெறிஞ்சு முள்மட்டுமா, கருவேலமுள்கூட கிடக்கத்தான் செய்யும்! அந்த வேதனையை தாங்கிக்கொண்டே நடந்தேன். ஜானகி கதவைத் திறந்தாள். பாட்டியை உள்ளே கொண்டுபோய்ப் படுக்க வைத் தேன். பாட்டி எனக்கு மீண்டும் நன்றி தெரிவித்தாள். "ஜானகி! ஐயா போகிறதுக்கு விளக்கை எடுத்துப் போய்ப் பாதையைக் காட்டு!' என்று பாட்டி சொன் ஞள். அழகுத் தெய்வத்தைப் பின்பற்றினான்வெளியேவந்தேன்.

"ஏன் ஜானகி! என் காலில் குத்தட்டும் என்பதற்காகவே பாதையில் நெறிஞ்சி முள்ளைப் பரப்பி வைத்திருக்கிறுயோ?" என்று அவளைக் கேட்டேன்.

"ஆமாம்! எங்களுக்குப் பாது காப்பாக நெறிஞ்சி முள்ளைத் தவிர வேறு என்னதான் இருக் கிறது? எனக்குக்கூட உங்கள் தோட்டத்திலே பெரிய முள் குத்திவிட்டது. இன்னும் அதை எடுக்கமுடியவில்லை!"

"அடடே! அப்போதேசொல் லியிருந்தால் டாக்டரை எடுக்கச் சொல்லியிருக்கலாமே?"

"முள்ளை எடுக்க டாக்டரா? முள்ளை முள்ளாலேயே எடுக்க லாம்!" என்று சிரித்துக்கொண் டே ஜானகி சொன்ஞள்.

எங்கள் இருவருக்குமே முள் குத்திவிட்டது. காதல் வியாதி யை காதல்கொண்டுதான் குணப் படுத்தவேண்டும். நான் வெகு நாளாக எதிர்பார்த்தபடி ஜானகி யைச் சந்திக்கும்பாக்கியம் எனக் குக் கிடைத்தது. ஆஞல் என் ஆசை அனைத்தையும் வாயால் சொல்ல எனக்கு ஏஞே முடிய வில்லை. நான் ஏற்கனவே எழுதி வைத்திருந்த காதல் கடிதத்தை ஜானகியிடம் கொடுக்க, பையி லிருந்து கையிலே எடுத்தேன்.

(தொடரும்)

தெறித்த முத்துக்கள்!

துதிபாடுங் கூட்டத்தை உருவாக்குவதே அரசாங்கக்கலை!

—பெர்னுட்ஷா

உலகத்தில் வாழ்க்கை ஒன்றுதான் நம்பத்தகுந்த புத்தகம்!

—காண்டேகர்

'விதி'யென்பது ஒடுக்கப்பட்டவர்கள், மிதிக்கப்பட்டவர்கள் கொதித்தெழாதிருக்கச் செய்த சதி!

—ஏ. கே. வேலன்

தொகுத்தவர்:
எஸ். எழில், ஆரணி.

* * * *

மக்கள் பிச்சை எடுத்தே வாழ வேண்டும் என பிரமன் படைத்திருப்பானுல் அவன் முதலில் அலேந்துதிரிந்துகெட்டழியட்டும்

—வள்ளுவர்

இயற்கையை மீறி, துருவி ஆராயவே மனிதன் பிறந்தான். கண்மூடிக்கிடக்க அல்ல.

—ஸ்டாலின்

உண்மைகளிலெல்லாம் தலே சிறந்த உண்மை அன்பேயாகும்.

—பேய்லி

தொகுத்தவர்:
சௌ. ச. சேகர், வீராஜிமங்கலம்.

* * * *

வயிற்றைப் போன்றதே மனமும்; அதில் நீ எவ்வளவு திணிக்கிருய் என்பது முக்யமல்ல; அது எவ்வளவு ஜீரணித்துக்கொள்கிறது என்பதுதான் முக்யம்.

—ஆல்பர்ட்ஜோ

குன்றென தலேநிமிர்; கொடுமையை எதிர்த்து நில்; அண்டம் சிதறினும் அஞ்சாதே!

—மகாகவி பாரதி

அறிவாளி நுழைய முடியாத இடத்தில் முட்டாள் சுலபமாக புகுந்துவிடுகிருன்.

—பெர்னுட்ஷா

தொகுத்தவர்:
இளஞ்சோழன், மானுமதுரை.

* * * *

எந்தச் சந்தர்ப்பத்தில் எதைச் செய்ய வேண்டுமோ அதைத் தீர ஆலோசனை செய்து அதன்படி நடப்பதுதான் உண்மையான சுதந்திரம்.

—கரிபால்டி

உலகில் நல்லவராகஇருப்பவர் பாடு மகா ஆபத்து.

—பெர்னுட்ஷா

நமக்குக் கோபமும் ஆத்திரமும் உண்டாகும்போது அவற்றை அடக்கி மனதை அன்புமயமாக்க வேண்டும்.

—மகாத்மா காந்தி

தொகுத்தவர்:
கலேதாசன், மானுமதுரை.

* * * *

தூற்றலேயும் புகழையும் சமநிலேயோடு பாவிக்கிறவனே தியாகியாக முடியும்.

—காந்தி

கற்களாலும் சுண்ணாம்பினாலும் கட்டப்பட்ட சிறைகளைக் காட்டிலும், கொடுமையானசிறை மனிதனின் சுயமரியாதையை மறுத்து, இழிவுபடுத்திவைக்கும் மனச்சிறை. —தாகூர்

உள்ளத்தில் உண்டாகும் கற்பனையை உணர்ச்சி குன்றாமல் பிறருக்குவெளிப்படுத்திக் கவரச் செய்வதே கலை!

—திருவாட்டியார்

அறிவு இருந்தும் ஆற்றல் இல்லையேல் அவன்வாழ்வுபாழே.

—லிங்கன்

தொகுத்தவர்:
கா. ராமர், முத்துலிங்காபுரம்.

* * * *

கடமை உணர்ச்சியே உன் நேர்மையான வாழ்வுக்கு சூத்திரம். —ஹென்றிபோர்டு

உலகில் உள்ள எல்லா சக்திகளாலும் மிகைக்கமுடியாதசக்தி —அதுவே மனிதனுடைய மனோ சக்தி. —ஸ்டாலின்

யாதும் நன்றோ, தீதோகிடையாது, எண்ணமே அதை அவ்விதம் தோற்றமளிக்கச்செய்கிறது.

—ஷேக்ஸ்பியர்

நம்பிக்கை ஒருவன் வாழ்வில், வழிநடையில் துணைவியாய், வயோதிகத்தில் தாதியாய் அலையுறும் ஆத்மாவிற்கு ஆறுதல் அளிக்கிறது. —சாக்ரடீஸ்

தொகுப்பு: யூ. அ. ராஜா, ஆலூர்.

சத்திய வேதமாகிய
பைபிளை ஆழ்ந்து படிக்க
வேத மாணாக்கர் ஐக்கிய
சங்கத்தாரால் தமிழில்
வெளியிடப்பட்டிருக்கும்
வேதோபதேசவினாவிடை
என்ற புஸ்தகம்
கிடைக்கும்.
விலை: சாதா பைண்டிங்
ரூ. 0—12—0
அட்டைப் பைண்டிங்
ரூ. 0—14—0
தபால் சார்ஜ் வேறு

“எட்வர்ட் காபி ஓர்க்ஸ்”
காளியம்மன் கோவில் தெரு, விருதுநகர்.

காதற்கடல்

தொடர்கதை — விருதை மகிழ்நன்

35வது அத்தியாயம்
பத்தினித் தெய்வம்

அடங்கா ஆத்திரமொழிகளுக்குப்பின், சம்பந்தர் ஒருவகையாக இன்ஸ்பெக்டரின் சொல்லுக்குச் செவிசாய்த்து, மானேஜர் தன் காலிலும், தன் மகள் காலிலும் விழுந்து வேண்டிக் கொண்ட மன்னிப்பை ஏற்று, எழுத்து மூலமாகவும் வாங்கிக் கொண்டார்.

சப்இன்ஸ்பெக்டரும் இருநூறு ரூபாயை மானேஜரிடம் கொடுக்க, அவர் அதை சம்பந்தரிடம் நீட்டினார். ஆனால் அதை அவர் கண்ணால் கூட காண மறுத்துவிட்டார். ஆனால் அருகிலிருந்த சாரு, "அதை நீங்களே, நம் பள்ளியிலுள்ள ஏழை மாணவிகளின் கல்விக்கு புத்தகம், சிலேட்டு முதலியன உங்கள் அன்பளிப்பாக வாங்கிக் கொடுங்கள்" என்றாள்.

அவளது உயர்ந்த பண்பை, வாய்விட்டுக்கூறி இன்ஸ்பெக்டர் மகிழ்ந்தார். 'இப்பேர்ப்பட்ட உத்தமிக்கு ஊறு தேட முனைந்தோமே' என்று குத்திக்கொண்டது மானேஜரின் மனம்.

அன்றுமுதல் மானேஜர் மிகவும் கௌரவத்துடன் நடந்துகொண்டதுமல்லாமல், தன்குடும்ப நண்பர்களாக்கிக் கொண்டார், சம்பந்தரையும், சப்இன்ஸ்பெக்டரையும். ஞானக் கண்ணைத் திறந்துவிட்ட பத்தினித் தெய்வமாகவே போற்றிப் புகழ்ந்து வந்தார் சாருவை.

இவ்விதம் சாருவின்வாழ்க்கை பள்ளி ஆசிரியை நிலையில் ஓடிக்கொண்டிருந்தது, யுத்தம் முடிந்து பட்டாளத்திலிருந்து திரும்பி சௌக்கியமாக வீடுவந்து சேரவேண்டுமே தனது அண்ணன் ஜெகதீஸ் என்ற எண்ணங்களுக்கிடையே.

36வது அத்தியாயம்
ரகசியம் அம்பலமானது

26வது அத்தியாயத்தில், பர்மா முனையில் தீஸ், ஸில்வியின் டாலரில் கண்ட விஷயத்தால் பயித்தியம் பிடித்தவனைப்போல் அலறிக்கொண்டு அவள் வெளிச்சென்ற வழிநோக்கி ஓடினான் என்பது

வரை கவனித்தோம். அதே நேரம் இந்தியாவில் நீஸின் தந்தைசம்பந்தர், சகோதரிசாரு, சரோஜாவின் தந்தை வக்கீல் அரியநாதர், காமு முதலியவர்களின் நிலைமையையும் இதுவரை கவனித்தோம். இனி மீண்டும் வாசகர்களை என்னுடன் பர்மா முனைக்கு அழைத்துச் செல்ல விரும்புகிறேன்.

வில்லி சென்ற திக்கைநோக்கி ஓடிய நீஸ், நிஜமாகவே பைத்தியம் பிடித்தவனைப்போல் பேத்திக்கொண்டே ஓடினான். மனதில் இறுத்தி வைத்த விஷயங்களை தங்களை அறியாமலே வாய்விட்டுக் கூறும் மதி இழந்தவர்களைப்போல் நீஸும் "வில்லி... சரோஜா... வில்லி...சரோஜா... என்றுமாறிமாறிக் கூவிக்கொண்டே ஓடினான். ஆனால் அதே நேரம நேசநாட்டினரின் விமானங்கள் ஆகாயத்தில் திரண்டு மின்னல் வேகத்தில் மேலும் கீழுமாகப் பாய்ந்து குண்டுகளை வர்ஷித்துக்கொண்டு இருந்தன. இவை ஒன்றும் அவன் கண்களிலோ, கருத்திலோ தைக்கவில்லை. "வில்லி......சரோஜா" இதே சொற்களைக்கூறி கண்களை நாலாபக்கமும் சுழற்றி, அங்குமிங்கும் பதுங்கும் இடங்களை நோக்கி ஓடுபவர்கள் குழாமில் துலாவியபடியே ஓடினான்.

அங்கோர் பகுதியில், பெண்களின் கூட்டமொன்று அலறியபடி ஓடிக்கொண்டு இருந்தது. அதில் நர்ஸ் உடையணிந்த சிலரும் காணப்பட்டனர். அக்கூட்டத்தைநோக்கி நீஸ் விரைந்துகொண்டிருந்த சமயம், ஐயோ கூறக்கூட நா எழவில்லை. அங்கு ஒரு குண்டு விழுந்து வெடித்ததில் அதில் சிக்குண்ட மக்களின் கை, கால், தலை, உடல்கள் சிதறிப் பறந்தன. நினைக்கவே பயங்கரம். கண்ணைமூடிக்கொண்டான் நீஸ். ஆனால் அடுத்த வினாடி அவன்மீது ஏதோஒன்று வந்து 'தொப்'பென்றுவிழுந்தது. திடுக்கிட்டுக் கண்விழித்தான். தலையற்ற ஒரு குழந்தையின் உடல், அவன் காலடியில் கிடந்தது. யுத்த முனையிலேயே பல ஆண்டுகள் பழகியிருந்தும் அச்சம்பவம் நீஸின் உள்ளத்தை அப்படியே குலுக்கியது.

குண்டு விழுந்த இடத்தில் இருந்த சிலமரங்களின் கிளைகள் வேறு சிதறியது. அவ்விடத்தில் உயிரிழந்தவர்கள் போக, உயிருக்காக மன்றாடிய பலரின் கூக்குரல் பலமாக இருந்தது.

தடைப்பட்டிருந்த நீஸின் நடை மீண்டும் கிளம்பியது. குண்டுவிழுந்து, அரை உயிரும், குறை உயிருமாகக் கிடந்த மக்களின் இடையே புகுந்தான். அவன் கண்கள் அங்கு நர்ஸ் உடை அணிந்து வீழ்ந்துகிடந்தவர்கள் மீதுதான் சென்றது. மனம் பதைபதைக்க ஒவ்வொருவராகப்பார்த்தான். தலை, முகம், ஏதாவது இருந்தால் அல்லவா

அடையாளம் காண. அவனது எண்ண அலைகளின் எழுச்சி மனவிறிம்பை எட்டியது. ஒரு சமயம் இறந்து கிடக்கும் நர்ஸ் களில், லில்லியும் ஒருவளாக இருப்பாளோவென்று அவன் மனம் திரும்பத் திரும்ப, உலைக் கூடத்தில் மீண்டும் மீண்டும் சம்மட்டி அடி வாங்கும்சூடேறிய இரும்புபோல் அடித்தது.

அப்பொழுது அங்கோர் ஓரத் தில், ஒடிந்து விழுந்து கிடந்த ஒரு மரக்கொப்பின் கீழிருந்து ஒரு ஈனக்குரல் கேட்டது அவ் விடத்தை நோக்கி ஓடினான். அதுவும் ஒருநர்ஸ்தான். குப்புற விழுந்து கிடந்தாள் மேலே மரம் அமுக்கிக்கொண்டிருந்தது. இவளும் முகமற்ற முண்டம் தானோ? என நினைத்தபடியே, கொப்பைப்புரட்டி, கீழேகிடந்த வளையும் புரட்டினான்.

அவன்கண்களை அவனாலேயே நம்பமுடியவில்லை. பையிலிருந்த கைக்குட்டையை எடுத்து வேக மாக அவள்முகத்தைத் துடைத் துக்கொண்டே, "லில்லி சரோ ஜா...இதோ பார், இதோ உன் தீஸ்.. இனி நீ எங்கு கூப்பிட் டாலும், என்ன செய்ச் சொன் னாலும் செய்கிறேன்...கண்ணை விழித்துப்பார்...சரோ...சரோ" என்று பதைபதைக்கப் புலம்பி னான்.

அவன் ஆவல் வீண்போக வில்லை. மெதுவாக அவள்விழித் தாள். காயம் ஒன்றுமில்லை. மரம் முறிந்து மேலே விழுந்த தால் ஏற்பட்ட அதிர்ச்சியால், பேந்தப்பேந்தவிழித்தாள். சற்று நேரத்தில் தன் உணர்வு பெற்று "நீங்களா?... இங்கு எப்படி வந்தீர்கள்?"

"சரோ...நான்தான்..."

"என்ன சரோவா?"

"இனியும் ஏமாற்றமுடியாது. இவ்வளவு நாட்களும் நீ நடித்த நாடகம் முடிவிற்கு வந்துவிட் டது. உன் டாலரின் உள்ளே பதிக்கப்பட்டிருந்த உனதுபுகைப் படம் மங்களம் பாடிவிட்டது"

சரோஜா ஒன்றும் பதில் கூற வில்லை. தலையைக் கவிழ்த்துக் கொண்டாள் வெட்கத்தால். அவளை அப்படியே பூக்கொத்த் டியைத் தூக்குவதுபோல் தூக் கினான். இன்னும் வெட்கம் அதிகமாக முட்ட அப்படியே அவன் கழுத்தை தன் இரு கை களாலும் இறுகச் சுற்றித் தீக் கோழி மண்ணிற்குள் தலையை மறைத்துக்கொள்ளுவது போல, அவன் நெஞ்சுடன் தலையைக் கவிழ்த்துக்கொண்டாள்.

திடீரென்று எதையோ நினைத் தவள்போல், "என்னைக் கீழே விடுங்கள், என்னைக் கீழேவிடுங் கோன்னு" என்று கூறி துள்ளிக் கீழே குதித்தாள் அவன் கையி லிருந்து.

"ஆமாம்...சரியாக நடக்கக் கூடமுடியாதபடி இருந்தீர்களே இங்கே எப்படி வந்தீர்கள்?"

இப்படி அவள் கேட்டபின் தான், நீலிற்கும் தனது முந்திய நிலை ஞாபகத்திற்குவந்தது. அவனுக்கே அது புரியாத புதிராக ஆச்சரியத்தைக் கொடுத்தது.

"அதுதான் எனக்கும் புரியவில்லை! சாதாரணமாக நடந்துகூட வரவில்லை, வேகமாக ஒடியல்லவாவந்த ஞாபகம் வருகிறது. இதுதான் மனோசக்திபோல் தெரிகிறது. மிகவும் பிரியமான, பிடித்தமான பிறர் ஒருவருக்கு இடையூறு, தீங்கு ஏதாவதுநிட ரென்றுஏற்பட்டு மனதைத் தாக்குமானல் நீண்டநாள்வியாதியால் பிடிக்கப்பட்ட நரம்புகள்கூட புத்துயிர் பெற்று, முறுக்கேறி, இப்படிக் குணமாகிவிடும்போல் தெரிறது" என்றான் மகிழ்ச்சி பொங்கி வழிய.

இவ்வளவிற்கும், மேலே விமானங்களின் இரைச்சல் இருந்துகொண்டேதான் இருந்தன. மக்கள் சிதறியோடிய வண்ணமே இருந்தனர். ஆனல் இவர்களின் மனோநிலை எதையும் சட்டை செய்யவில்லைஅவ்வளவுநேரமும். நீண்டபிரிவிற்குப்பின் கூடியவர்கள் இருக்கும் இடத்தில் நாம் அதிகநேரம் வம்பளந்துக்கொண்டிருப்பது மிகவும் தப்பான காரியம்.

37வது அத்தியாயம்
நீல், சரோஜா எங்கே?

பர்மா முனையிலே நேசநாட்டினரின் கை ஓங்கியது. 1945 ஜனவரி இரண்டாவது வாரத்தில் "அக்யாப்" நேசநாட்டினர்வசம் மீண்டது. அடுத்து மார்ச்சிலே 'மார்தலே' கைப்பற்றப்பட்டது. இப்படி தோல்விமேல் தோல்வி ஏற்பட்டு ஜப்பானியரும், இந்திய தேசிய ராணுவத்தினரும் பின்வாங்குவதில்போட்டியிட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஜப்பானியர் பின்வாங்கினல் தங்கள் நாட்டுக்கே செல்லலாம். ஆனல் இந்திய தேசிய ராணுவத்தினர் எங்கு செல்வது? ஆரம்பத்தில் காங்கிலேயில் பொதுமக்களாக இருந்தார்களோ அதே போல் சாதாரண குடிகளாக மாறிக்கொண்டு வந்தார்கள்.

வெற்றி வேகத்தில் ஜெர்மானியரையும் சிந்திக்கவைத்த ஜப்பானியர், இன்று பின்வாங்கும்நிலை வந்ததற்கும் காரணம் இல்லாமல் இல்லை.

திறமைமிக்க தீரர்; சுருட்டுப் புகைக்காத சூரர்; மதுபானம் அருந்தாத மகிபர்; சிற்றின்பத்தைச் சிந்திக்காத சீலர்; சுயநலமற்றதேசாபிமானி எனப் போற்றப்பட்ட ஹிட்லர் தலைமை தாங்கிய, உலகிலேயே திறமையிலும், தந்திரத்திலும்,விஞ்ஞானவளர்ச்சியிலும், புதியபுதிய இயந்திரப் பயிற்சியிலும், அறிவிலும் இணையற்ற வீரர்களைக்கொண்ட ஜெர்மன் இராணுவம் நான்கு பக்கங்களிலுமிருந்து வந்த எதிர்ப்பை சமாளிக்க முடியாது பின்வாங்கியது. 1945ல் ஏப்ரலில் செஞ்

சேனை ஜெர்மன் தலைநகர் பெர்லினில் நுழைந்து மே முதல் வாரத்தில் ஜெர்மன் தலைமை ஸ்தாபனமான "ரைஷ்ஸ்டாக்" கட்டிடத்தின்மீது தனது கொடியையும் பறக்கவிட்டது.

ஹிட்லர் மறைந்த மாயம் தெரியவில்லை. இறந்துவிட்டதாகவே தகவல்கிட்டியது. முசோலினி தனதுநாட்டுமக்களாலேயே சுட்டுக்கொல்லப்பட்டார். இந்நிலையில் 1945 மே 7உ ஜெர்மனியின் புதிய தலைவர் அட்மிரல் டோனிட்ஸ், நிபந்தனையற்ற சரணாகதியில், நேசதேச தளபதி ஐஸன்ஹோவர் முன்னிலையில் கையெழுத்திட்டு, யுத்தநிறுத்தப் பிரகடனம் செய்யப்பட்டது.

1941 ஜுன்22உ ரஷ்யாமீது பாய்ந்த நாஸி ஜெர்மனியின் படையின் கொட்டம் ஒடுக்கப்பட்டு, ஐரோப்பியயுத்தம் முடிவு பெற்றது. இப்படி ஐரோப்பாவில் நிகழ்ந்த சம்பவங்கள் ஜப்பானின் தோல்வியைத் துரிதப்படுத்தின.

பின்வாங்கி ஓடும் படைகளின் இடையே நமது தீஸனும், சரோஜாவும் இடத்திற்குத்தக்கநாடகம் நடித்துச் சென்றுகொண்டிருந்தனர். ஒரு இடத்தில் ஜப்பானியருக்கு எதிராக தீஸ் தனது நேசநாட்டுப் படைகளுக்கு ஏற்றார்போல் கிராம மக்களுக்கு உபதேசித்தும், ஜப்பானிய ஆட்கள் இருக்குமிடங்களில் அவர்களுக்கு ஏற்றார்போல் பேசியும் வந்தான்.

இவ்விதம் பேசிவருவது ஆபத்து என்பதை அடிக்கடி சரோஜா எச்சரிக்கை செய்துகொண்டே வந்தாள். விஷயம் தெரிந்துவிட்டால் பழிபாவத்திற்கு அஞ்சாத மூர்க்கர்களான ஜப்பானியர் சுட்டேவிடுவார்கள் என்றும் கூறினாள். எனவே தீஸ் சர்வஜாக்கிரதையாகவே தனதுசொல்லாயுதங்களைப் பிரயோகித்து வந்தான்.

படைகளுடனேயே பின்வாங்கிக்கொண்டு வந்தவர்கள், ஒரு நாள் இரவு எதிர்பாராதவிதமாக திடீரென்று ஏற்பட்ட நேசதேச விமானப்படைத் தாக்குதலினால் சிதறியோடும்போது படைகளினின்று இருவரும் பிரிந்து விலகி அவர்கள் கால்கள் இட்டுச் சென்ற வழி சென்று காலையில் ஒரு குக்கிராமத்தை அடைந்தனர். அதன்பின் அவர்கள் ஜப்பானியர் பட்டாளத்தினின்றும் சாஸ்வதமாகவே பிரிந்துவிட்டார்கள் என்றே கூறவேண்டும். உடைகளும் ஆளும் உருமாறினார்கள்.

ஊருக்குத்தக்கபடி, அங்குள்ள மக்களின் உள்ளப்போக்கை அறிந்து அவர்களுக்கேற்பப் பேசிக்கொண்டே இந்தியா வந்தடைவதற்குரியவழிகளைச்செய்ய ரங்கூனை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள்.

ஒருநாள் ரங்கூனுக்குச் சில மைல்களுக்கப்பாலுள்ள ஒருகிராமத்தில் இருக்கும்பொழுது அவ்வழியே ஒருபட்டாளம் செல்லப்

போவதற்குரிய அறிகுறிகள்தென் படவே, அநேகமாக அது ஜப்பானியருடையதாகவே இருக்குமென யூகித்த தீஸ், எக்கசக்கமாக மாட்டிக்கொள்ளக் கூடாதென நினைத்து ஜப்பானியர்களுக்கு வக்காளத்து வாங்கிப் பேசுபவன்போல் நடித்தான். ஆனால் காரியம் வேறுவிதமாக முடிந்துவிட்டது. வந்தது முன்னேறிவரும் நேசதேசப் படை. முன்கூட்டியே அப்பிரதேசத்தில் நடமாடியஒற்றர்கள்கவனத்திற்கு தீஸின் செய்கை தெரியவே பட்டாளம் அப்பகுதியைத்தாண்டிச் செல்லும்சமயம் முதல்வேலையாக தீஸும்,சரோஜாவும் ஜப்பானின் ஒற்றர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர்.

சிலதினங்களில் ரங்கூன் கைப்பற்றப்பட்டது. நேசத்துருப்புக்கள் இவ்வளவு வேகமாக முன்னேறியதற்கு முக்கிய காரணமாக இருந்தது மதராஸ் "பயனியர்" படைகளின் திறமையேயாகும். சாப்பர்ஸ் & மைனர்ஸ் என்று வழங்கப்பட்ட இவர்கள், சைனியங்களுக்குமுன் சென்று காடு, மேடுகளைச் சீர்திருத்தி, பாதைகளைச் செப்பனிட்டு ராணுவம் தடையின்றிதுரிதமாக முன்னேற தக்க வழி வகுத்துக் கொடுத்ததே பெரிதும் இத்துரித முன்னேற்றத்திற்குக் காரணம்.

இங்கிலையில் நேசதேசத்தினர் வெற்றிமேல் வெற்றி பெற்று வரும் நாளில், யுத்தத்தை விரைவில் முடிக்கும் அவாக்கொண்ட அமெரிக்கர், ஜப்பானில் "ஹிரோஷிமா" என்ற இடத்தில் முதலாவது அணுக்குண்டை வீசினர். இந்த ஒருகுண்டினல் ஏற்பட்ட சேதம் உலக மக்கள் அனைவரையும் திகைக்கவைத்தன. சுமார் நான்குமைல் சுற்றுவட்டாரத்திற்குப் புல்பூண்டுகள்கூட அற்றுப் போய்விட்டது. அவ்வளவு கொடிய சேதத்தை உண்டாக்கியது.

இனியும் யுத்தத்தை நீடித்துக் கொண்டே போனல் ஜப்பான் தேசமே அழிந்தாலும் அழியும் என்ற முடிவிற்குவந்த ஜப்பானியர் 1945 ஆகஸ்ட் 2வது வாரத்தில் யுத்தத்தை முடித்து சரணுகதி அடைந்தார்கள். பர்மா, மலேயா முதலிய இடங்களிலுமிருந்த படையினரும் சரண் புகுந்தார்கள்,

பர்மாவில் சுபாஷின் இந்திய சுதந்திர சேனையில் மட்டும் சுமார் இருபதாயிரம் பேர்வரை நேசத் துருப்புக்களால் கைது செய்யப்பட்டனர்.

ஜப்பான் வீழ்ச்சியின் இறுதி நாட்களின்போது போர் வீரர் போஸ் ஏறிச்சென்ற விமானம் விபத்துக்குள்ளாகி நொறுங்கி வீழ்ந்து சுபாஸ் மரணமடைந்தார் என்ற செய்தி இந்தியமக்களனைவரையும்திடுக்கிடவைத்தது தீஸும், சரோஜாவும் எங்கோ ரகசிய முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

(அடுத்த இதழில் முடியும்)

சந்தேகம் ஒழிக!

"ஜாலி"

MADRAS

ரத்தினம், தேனி.

கே: தாசியைப் பார்ப்பது குற்றமா?

ப: குற்றமல்ல; அபாயம்.

தி. மலை, பொள்ளாச்சி.

கே: அரசாங்க அலுவலகங்களில் நிறைய ஊழல்களும், லஞ்சங்களும் நடைபெறுவதாகக் கூறுகிறார்களே அப்படியானால் அதைத் தடுக்க வழி என்ன?

ப: இப்பொழுதுள்ளவர்களையெல்லாம் வீட்டுக்கு அனுப்பிவிட்டு புதிய ஆட்களை நியமித்துப் பார்க்க வேண்டியதுதான்.

ஆர். செல்லத்துரை, மதுரை.

கே: இயற்கை ஏன் சாவைப் படைத்திருக்கிறது?

ப: பள்ளிப் பரீக்ஷைகளில் குறிப்பிட்ட நேரம் கொடுத்து அதற்குள், கேட்கும் வினாக்களுக்கு பதில் எழுதச்சொல்லி சாமர்த்தியத்தைச் சோதிப்பதுபோல், மனிதனின் நற்செய்கைகளை, துரிதப்படுத்தி உயர்ந்த காரியங்களை தன் வாழ்நாட்களில்செய்வதற்காகவே சாவை இயற்கை உண்டாக்கியிருக்கிறது. உடல்தான் மாயுமேதவிர அவன் ஆக்க வேலைகள் மாய்வதில்லை.

கே: வாழ்க்கை வளமை உடையதாக இருக்கவேண்டுமானால் இளம் தம்பதிகள் என்ன செய்யவேண்டும்?

ப: முதலில் தங்கள் இருவரையும்பற்றிய உண்மைகளை ஒளிவு மறைவு இன்றி பரிமாறிக்கொண்டு, பொருள் வருவாய்க்கும், சூழ்நிலைக்கும் தக்கபடி நடந்துகொள்ள வேண்டும்.

கே: மனிதன் உயர்வது தாழ்வது எதனால்?

ப: அவன் செய்கைகளினால்.

கே: திருவள்ளுவர் அரசியல் எப்போது ஏற்படும்?

ப: வீட்டாட்சியில் வள்ளுவம் நுழைந்தாலொழிய நாட்டாட்சியில் ஏற்பட வழியில்லை.

கே: விஞ்ஞானிக்கும் அஞ்ஞானிக்குமுள்ள வேறுபாடுகள்யாவை?

ப: பிறர் செய்யாத ஒன்றை ஆக்குபவன் விஞ்ஞானி. மனதை அடகு வைப்பவன் அஞ்ஞானி.

ச.வீ.ராமகிருஷ்ணன், மீசலூர்.

கே: நாட்டுமுன்னேற்றத்திற்கு வேண்டியது உழைப்பா? அல்லது பணமா?

ப: பௌண்டன் மட்டும் போதாது, உள்ளே மையும் இருந்தால்தான் எழுதலாம். அதுபோல உழைப்பும் வேண்டும், அதற்குத் தக்க வசதியமும் வேண்டும்.

எ. பி. கணேசன், அரையபுரம்.

கே: பருவம் வந்த பெண் பல ஆண்டுகள் கல்யாணம் தடைப்பட்டுப்போனால் அவளதுமனது என்ன நிலையில் இருக்கும்?

ப: எந்தக் கஷ்டத்தையும் சமாளிக்கும் வயிரநெஞ்சாக மாறும்

கே: சினிமா நடிகையில் பாட்டில் சிறந்தவர் யார்? நாட்டியத்தில் சிறந்தவர் யார்?

ப: பாட்டில் பானுமதி, நாட்டியத்தில் குமாரி கமலா.

காசிராஜன், விருதை.

கே: விற்பனை வரி சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கூறவேண்டுகிறேன்.

ப: தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், விற்பனை வரிச் சட்டப்புத்தகம் 4 அணா விலையில், கவர்ண்மென்ட்பிரஸ்,சென்னை என்றவிலாசத்திற்கு எழுதிப்பெற்று தெரிந்துகொள்ளுங்கள்.

அ. சலம், விருதுநகர்.

கே: இப்பொழுது நடந்த நகர சபைத் தேர்தல்கள் ஜனநாயக அடிப்படையில் நடைபெற்றதுதானா?

ப: ஏன்? தேர்தலின்போது நடமாடிய பணநாயகத்தைக் கண்டு பயந்துவிட்டீர்களா?

எஸ். பாலராசன், கோவில்பட்டி.

கே: பெண்களைக் கண்டதும் மயங்கும்கவர்ச்சி, உடல்வனப்பிலா? உள்ளன்பிலா? உடையழகிலா?

ப: கண்ணும் கருத்தும் தடுமாற்றமடைவதால்.

(ஒருவர் 3 கேள்வி கேட்கலாம்)

விருதுநகர் சென்ட்ரலில் 17—10—52 தீபாவளி முதல்
T. R. ராமச்சந்திரன், P. K. சரஸ்வதி, நரசிம்ம பாரதி நடித்த
நேஷனல் புரொடக்ஷன்ஸின் மாப்பிள்ளை டைபெறுகிறது

இல்லற வாழ்வு இன்பமடைய.....!

"ராஜாஜீ"

நான்கடி உயரம்

நான் பழையதலைமுறையைச் சேர்ந்தவன். என்றாலும் தற்காலத்தில் இந்தியாவிலுள்ள எல்லா கலாசாரமும் தரையிலிருந்து 4 அடி உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை அறிவேன். முன்பு நாம் தரையில் படுத்து உறங்கினோம்; தரையில் உட்கார்ந்து உணவு உண்டோம்; தரையிலேயே உட்கார்ந்து கல்வி கற்றோம். ஆனால் தற்காலத்தில் நாம் நாற்காலியிலேயே உட்காருகிறோம்; மேஜைமேலேயேசாப்பிடுகிறோம் கட்டிலிலேயே படுத்து உறங்குகிறோம். அதாவது அனைத்தையும் தரையிலிருந்து நான்கடி உயரத்திலேயே செய்கிறோம்.

நான் பிறந்த அந்தப் பழங் காலத்திற்கும் தற்பொழுதுள்ள நாகரீக யுகத்திற்கும் உள்ள முக்கிய வித்தியாசம் இதுவே. நான் பரிகசிக்கவில்லை. சிறிது சிந்தித்தால் நான் கூறுவது முற்றிலும் உண்மைஎன்பதைஉணருவீர்கள்

இந்தமாற்றத்தை நான்வெறுக்கிறேன் என்று நினைக்கவேண்டாம். நான் மாறுதலை விரும்புகிறேன். ஆனால் மாறுதல் நம் வாழ்வு முறையுடன் இணைய வேண்டும் என்பதை வற்புறுத்துகிறேன். சில குடும்பங்களை உயர்த்தியதால் இந்தியாவையே உயர்த்திவிட்டோம் என்று நினைத்துவிடக்கூடாது. பார்க்கப்போனால் இந்த நான்கடி உயர வாழ்விற்குத்தான் நமது தற்காலக் கல்வி முறைகள் பயிற்சி தருகின்றன.

செக்கண்டரி பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் குடும்பசாஸ்திர போதனையும், குடும்ப சாஸ்திர இலாகாவும் சேர்க்கப்பட வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள். உற்றுணருமிடத்து இது உப பாடமாகிறதேதவிர முக்கிய பாடமாகவில்லை.

அங்கம் உடலாகுமா?

சலவை செய்யும் வழியையோ பதார்த்தங்களைப் பக்குவம் செய்யும் முறையையோ, சில கைத்தொழில் வேலையையோ கற்றுவிட்டதனால் குடும்ப சாஸ்திரம் முழுவதும் தெரிந்து கொண்டதாகிவிடுமா? கை, கால் முதலிய அங்கங்கள் என்ருவது

பூரணதேகமாகுமா? அனைத்தும் சேர்ந்துதான்தேகம். அதுபோல இத்தொழில்களனைத்தும் மற்றும் இவற்றுடன் வேறு பல கலைகளும் சேர்ந்ததே குடும்ப சாஸ்திரம். அது குடும்ப சந்தோஷக் கலை. வீட்டைச் சுத்தமாகவும், நறுவிசாகவும் வைத்துக்கொள்ளவும், சமையலைச் சரிவரப் பக்குவமாகச்செய்யவும், சாமான்களை வீணுக்காது செட்டாக இருக்கவும் தெரிந்துகொள்வதுநல்லதே. அத்துடன் இல்லறத்தை நடத்தும் சிறந்த வழிதுறைகளையும், தம்பதிகள் மனமகிழ்ச்சி பெற்று மலர்ச்சியான வாழ்வில் பரிமளிக்கவும் தெரிந்துகொள்ளவேண்டிய தவசியம். அதுவேஉண்மையான குடும்ப சாஸ்திரம்.

"வையத்து வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்று திருவள்ளுவர் கூறியிருக்கிறார்.

பெண்ணின் முதல் படிப்பு

முதன் முதலாக ஒரு பெண் எவ்வாறு தனது கணவனையும், குழந்தைகளையும் மகிழ்ச்சியுறச் செய்யவேண்டுமென்பதை முதல் பாடமாகக் கற்றுக்கொள்ளவேண்டும். கணவனுக்கு நல்ல உணவளித்தலும் வீட்டைநறுவிசாக வைத்துக்கொள்ளுவதும் முக்கியம். அன்பாகக் கணவனுடன் பேசத் தெரிந்துகொள்ளவேண்டும். இந்த முதல் படிப்பு இல்லாவிட்டால் வீடு நரகமாகவே தோன்றும்.

ஆனால் இதுமட்டுமே குடும்ப சாஸ்திரமாகிவிடாது. கனிந்த காதல் நெகிழ்வு, பொறுமை, மனதை அடக்குந் தன்மை, எதிர்த்து வாயாடாதிருத்தல், கோபங்கொள்ளாமலிருத்தல்முதலியவற்றையும் கற்றுத்தர வேண்டும். இவைகளைக் கற்றுக் கொடுப்பது கஷ்டமே; ஆனாலும் அவசியம் கற்றுக்கொடுக்க வேண்டியதுதான். ஏனெனில் தற்காலப் பெண்களுக்கு இவை தேவை.

பெண்களது முன்கோபம்

பொதுவாக நான் கூறுவதை பொறுத்துக்கொள்ளுங்கள். தற்காலக் கல்லூரி மாணவிகள் பலர் சீக்கிரம் சினமடைந்துவிடுகின்றனர். மூக்கு நுனியில் முன்கோபம் இவர்களுக்கு என்று கூடச் சொல்லலாம். அவர்களது படிப்பின்பாரமும், பரீட்சையில் தேர்ச்சி பெற வேண்டுமென்ற விருப்பத்தின் வேகமும் அவர்களை இவ்வாறு முன்கோபமடையச் செய்கிறதென்று எண்ணுகிறேன். எனது சிறிய அனுபவத்தில் இந்த மாணவிகள் கல்லூரிகளில் தமதுவகுப்புகளில் மலர்ந்த முகத்துடனிருப்பதைக் கண்டிருக்கிறேன். இந்தப் பெண்கள் வீட்டிற்கு வரும்பொழுதுதான் முகத்தைச் சிணுக்குகிறார்கள். வீட்டிற்குத் திரும்புகையில்

அவர்களது உள்ளமும் உடலும் களைப்படைந்திருக்கிறது. அந்த நிலையில் அடுத்தநாள் கல்லூரிப் பாடங்களுக்கும் தயார் செய்து கொள்ளவேண்டி இருக்கிறது. அப்படி உள்ளபொழுது அவர்களை வீட்டுக்காரியமோ வேறு வேலையோ செய்யச் சொன்னால் திடீரென்று அவர்களுக்கு கோபமுண்டாகிறது. அவர்களது பாடப்பயிற்சியின் கடுமையே அவர்களை முன்கோபமடையச் செய்கிறது.

குடும்பபாரம்

ஆனால் இந்தக் கல்லூரி மாணவிகளுக்கு ஓர் எச்சரிக்கை செய்ய விரும்புகின்றேன். அவர்களது கல்விபாரத்தைவிட குடும்பபாரம் மிகவும் கடுமையானது. கல்லூரி வாழ்க்கையினும் குடும்பவாழ்க்கை பல மடங்கு கோபத்தைத் தூண்டத்தக்கது. சம்சார சாகரம் என்று கூறுவார்கள். சாகரம் (கடல்) போல துன்ப அலைகள் குடும்பத்தில் ஒன்றன்பின் ஒன்றாக எழும்; பொறுமையைப் பரீட்சைசெய்யும் சந்தர்ப்பங்கள் பல அடுக்கடுக்காக அலைமோதி நிற்கும். இவை அனைத்தையும் சகித்து சம்சாரத்தை நடத்திச் செல்ல நீங்கள் நன்கு பயிலவேண்டும்.

பழந்தமிழ்ப் புலவர் ஒருவர் எடுத்து விளக்கியிருப்பதுபோல உங்களது சினத்தை அடக்கி, சிரித்தமுகத்துடன் அன்புகெழுமிய இன்பவார்த்தைகளால் உண்மையையே பேசுவதென்ற உயர் விரதத்தைக் கடைப்பிடித்தால் நீங்கள் கஷ்டங்களைக் கடந்து இன்ப வாழ்க்கையை நடத்துவீர்கள்.

கணவனிடம்...

உண்மையே பேசவதென்று உறுதிகொள்ளுங்கள். அதுவும் அன்பாக நேசிக்கும் உங்களது கணவரிடம் உண்மையைத்தவிர மறந்தும் வேறுமொழி கூற வேண்டாம். கணவனது அன்பையும், ஆதரவையும் அடைய வேண்டிய நீங்கள் அவரிடம் அன்பும்உண்மையும்கொண்டால் கணவனுடன் பேசுகையில் உங்களதுமொழி மிருதுவாக ஆகும். விவாகம் ஆகாதவர்களனைவரும், எல்லாப் பெண்டிரும் தம்தம் கணவருடன்பேசுகையில் மிருதுபாஷிணிகளாக விளங்குகிறார்கள் என்றே நினைக்கின்றனர். எல்லோரும் மிருதுபாஷிணிகளாக இல்லை. கணவனைத்தவிர மற்ற அனைவருடனும் மிருதுவாகவே பேசுகிறாள். இதுபோலவே கணவனும் தன் மனைவியைத்தவிர எல்லோருடனும் சாந்தமாகவே சம்பாஷிக்கிறார். துரதிஷ்டவசமாக இது நிகழ்கிறது. வெளியுலக வாழ்க்கையின் தன்மை கடுமையே. இதற்குக் காரணம் கணவனுடைய கடுங்கோபத்தை மனைவி பொறுக்கவேண்டும். மனைவியினுடைய மட்டற்றசினத்தை கணவன் தாங்கவேண்டும்

என்று நமது நாட்டில் சாதாரணமாக பாடம் பயிற்றுவிக்கப்படுகிறது. ஆனால் இது உண்மையான சந்தோஷம் தருவதாகாது. குடும்பத்தில் உறுதியான மகிழ்ச்சி நிலவ வேண்டுமென்றால் கணவனுக்கும் மனைவிக்கும் தன்னடக்கம்வேண்டும். இது வழிவழியானப் பழக்கத்தால் வரவேண்டும். இதுகுடும்ப சாஸ்திரம்.

தூய்மை, தன்னடக்கம்

மேஜைமீது துணிகளை இஸ்திரி செய்ய நீங்கள் பழகி இருக்கலாம். ஆனால் இன்னொரு பழக்கம் மிகவும் அவசியமானதென்பதை நீங்கள் உணரவேண்டும். அதுதான் தூய்மையும் தன்னடக்கமும். இவற்றை நீங்கள் பழகிக்கொள்ளவேண்டும். இது குடும்பசாஸ்திரம். ஆனால் இவை உங்களது பாடமுறையில் சேர்க்கப்பட்டுள்ளனவா, இல்லையா என்று எனக்குத் தெரியாது. இவற்றை அனுபவத்தில் உணரவேண்டும். மற்றவைகளிலிருந்து நீங்கள் உணர்ந்தவற்றைக் குடும்பத்துக்கு உபயோகமாக்க உதவுவதே குடும்ப சாஸ்திரம். அதனால் சமயல் செய்யவும், சலவை செய்யவும்தெரிந்தவுடன் குடும்ப சாஸ்திரத்தை அறிந்துவிட்டதாக நினைத்துவிடவேண்டாம். இவற்றைத் தெரிந்துகொண்டால் வீட்டை எப்படி வைத்துக்கொள்வதென்ற தொழிலைத்தான் தெரிந்துகொண்டிருக்கிறீர்கள் என்பதே அர்த்தம்.

இதனால் பெரும் பணக்காரர் வீட்டை நிர்வகிக்கும் பணியை செய்து பணம் சம்பாதித்து உங்களுக்கு வேண்டும் ஆடை ஆபரணங்களை வாங்கிக் கொள்வதுடன் உங்களது பெற்றோருக்கும் பணமனுப்பலாம். நல்ல நோக்கமாயினும் இதுவல்ல குடும்ப சாஸ்திரத்தின் உயர்தலட்சியம்

நான்கடி உயரத்தில் நடமாடுவதிலிருந்து தரையில் நன்கு நிலைபெறுவதுதான் குடும்பசாஸ்திரம் என்பதை விவாகம் செய்து நல்லறம் நடத்த விரும்புவோரனைவரும் நன்றாக மனதில் பதித்துக்கொள்ளவேண்டும்.

பெண்களது முகங்கள்

"இளம் பெண்களும் ஸ்திரீகளுமாகிய உங்களது முகங்களை உற்று நோக்கியவுடன் எவ்வாறு நீங்கள் எளிய குடும்பங்களில் வாழ்க்கை நடத்தப்போகிறீர்கள் என்ற சிந்தனையே என்னுள் எழுகிறது. நீங்கள் ஏழ்மையடைய வேண்டும் அல்லது வறியவர்களாக முயற்சி செய்யவேண்டும் என்பது எனது விருப்பமில்லை. ஆனால் உங்கள் மனப்பான்மை விசாலமடைய வேண்டும் என்பதே எனது விருப்பம்.

நீங்கள் வாழ்க்கைப்படும்குடும்பங்களில் எல்லாம் மின்சார வசதியும், மேஜைச் சாப்பாடும் இருக்குமா? உங்களது பிறந்த வீட்டில்உள்ள வசதிகள் புகுந்த

வீட்டில் கிடைக்காமலுமிருக்கலாம். எனவே வாழ்க்கையில் நீங்கள் இடத்திற்குத் தகுந்தாற்போலநடந்து நற்பெயரெடுக்கப் பழகிக்கொள்ளவேண்டும். இதுவே குடும்ப சாஸ்திரம்.

உங்களது குடும்ப நிர்வாகத்தை மின்சாரவிசிறிகள், மேஜை நாற்காலிகள், தையல்இயந்திரங்கள் முதலிய சாதனங்களில்லாமலே சீர்பெற நடத்த உங்களுக்குப் பயிற்சி அளிப்பதுதான் குடும்ப சாஸ்திரம்.

"தற்காத்துத் தற்கொண்டான்
பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள்
பெண்"

என்ற பண்புத்தன்மையை உங்களிடம் உண்டாக்குவதே குடும்ப சாஸ்திரத்தின் லட்சியம் என்பதை உணர்ந்துகொண்டால் நீங்கள் பெண்மணிகளாக விளங்கி வாழ்க்கை வளம் பெறுவீர்கள்"

[மேற்கண்டவை 23-9-52ல் சென்னை கிருஸ்தவ பெண்கள் கல்லூரியில் நடைபெற்ற இரண்டாவது அகில இந்திய குடும்ப சாஸ்திர மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு ராஜாஜி நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம்]

* * * *

குழந்தை பராமரிப்பு

இன்றையஇந்தியாவில் இளம் தாய்க்குத் தன் குழந்தையையே சரிவரப் பராமரிக்கத் தெரிவதில்லை. பழங்காலத்தில் பாட்டிமார்கள் தாய்மார்களையும், தாய்மார்கள் பெண்களையும் வழியாகப் பழக்குவிப்பது வழக்கம். அந்த நிலைமை மாறிவிட்டது.

நாகரீக நங்கையின் நாகரீகத் தன்மைகள் எவ்வளவு இருந்தாலும் குடும்பவாழ்க்கையை நன்கு நடத்த ஓரளவு பயிற்சி அத்யாவசியமானது பெண்களது பெரும்பகுதி நேரமும்,வேலையும் குடும்பத்தில்தான்செலவிடப்படவேண்டும். இதற்கான பயிற்சி இந்தியகலாசாரத்துடன் இணைந்து விளங்கவேண்டும். குழந்தைகளது வளர்ப்பு, பராமரிப்புபற்றியும் ஒவ்வொரு பெண்ணும் அவசியமாக அறிந்திருக்க வேண்டும்"

[மேற்கண்ட மகாநாட்டுக்குத் தலைமை வகித்த டாக்டர் ஏ. லக்ஷ்மணஸ்வாமியின் அறிவுரை]

நான் ஏன் அழகாய்ப் பிறந்தேன்?

"கடவுள்"

பெட்டியைத் திறந்து ஒவ்வொரு பட்டுச்சேலையாக எடுத்துச் சரிபார்த்துக்கொண்டிருந்தேன். ஒவ்வொன்றும் அந்தந்த சந்தர்ப்பங்களில் நிகழ்ந்த சம்பவங்களைநினைவுபடுத்தின. அதோ அந்தப் பச்சைக் கலர் கத்தரிப்பூ சேலைக்கு கமலியோடு எப்படிச் சண்டைபோட்டு வாங்கிக்கொண்டேன்! கடைசியில் அந்தப் பட்டுச் சேலையும் கண்ணில்பட்டது! கண்ணீர் மளமளவென்று பெருகியது! உள்ளம் குமுறியது!! உடல் நடுங்கியது!! அது தான் என்னுடைய கல்யாணத்திற்கு அப்பாவுடன் காஞ்சிபுரம் சென்றுவாங்கிய பட்டுப்புடவை! எல்லாவற்றையும் எடுத்துவிட்டு பார்க்கையில் எங்களுடைய திருமண அழைப்பிதழின் பிரதி ஒன்று இருந்தது. அதைஎடுக்கையிலேயே உள்ளமும்உடலும் ஒருங்கே நடுங்கியது. மணமாகி இரண்டு வருஷங்களில் நான் இந்தக் கதியை இப்படியா அடையவேண்டும்? என்னவெல்லாமோ ஜாதகப் பொருத்தம், பலவித சகுணங்கள் எல்லாம் சரிபார்த்துத்தான் எங்களின் திருமணம் சம்பிரதாயப்படி எல்லாம் வல்ல இறைவனின் திருவருளை முன்னிட்டு, பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுச் சுப யோக சுபதினத்தில் நிறைவேறியது. வந்திருந்த பெரியோர்களும் ஆசிர்வதிக்கத்தான் செய்தார்கள். எல்லாம் இருந்து பயன்...? கையில் அழைப்பிதழ் இருந்தது. என் சிந்தனை எங்கெல்லாமோ பின்னோக்கிச் சென்றது

* * * *

கடவுள் சிருஷ்டியில் நான் அபூர்வ அழகியாகத்திகழ்ந்தேன். பார்த்த எவரையும் பிரமிக்கச் செய்யும் ஆற்றல் எனக்கு இருந்தது. பள்ளிப் பருவத்திலிருந்து பருவமடைந்த நாள்வரை என்னுடைய அழகிற்கு ஏதோ அதிசய சக்தி இருப்பதாக நான் உணர்ந்ததில்லை. இருந்தாலும் எங்கேயும் எனக்கு ஒருவித முக்கியத்துவம் கிடைத்துவந்தது. இதில் பெருமையும், பூரிப்பும் கொண்டிருந்தேன். பள்ளியில் படிக்கையில் எந்த டிராமாநடந்தாலும் எனக்குத்தான் முக்கிய வேஷம் கிடைக்கும். என்னுடைய தமக்கை என்னைப்போல்

சிவந்த நிறமென்றாலும், பார்ப்பதற்கு லட்சணமாய் இருக்கமாட்டாள். "என்னுடைய கல்யாணத்தைப்பற்றிக் கவலையில்லை! கமலியின் கல்யாணம்தான் எப்படி நடக்கப் போகிறதோ" என்று என் பெற்றோர்கள் பேசிக் கொள்கையில்தான் என் அழகைப்பற்றி அறிந்தேன். ஒரு வகையில்பெருமையடைந்தாலும் கமலியின்கல்யாணத்திற்குஇடையூறாக இருக்கிறேனே என்ற எண்ணுகையில் வருத்தமாய்த் தான் இருந்தது.

பள்ளியில் பத்தாவதுபடித்தது வரை போதுமென்று எங்கள் இருவரையும் நிறுத்திவிட்டார்கள். வீட்டைச் சுற்றிச்சுற்றி வருவதுதான் எங்கள் வேலை. எந்த நேரமும் பெற்றோர்கள் எங்கள் இருவருடைய கல்யாணத்தைப்பற்றித்தான் கவலைப்பட்டுக் கொள்வார்கள். "வயதுப் பெண்களை எத்தனைநாட்களுக்குத்தான் வீட்டிலேயே வைத்திருப்பது. சீக்கிரம் வரனைப் பார்த்து ஏற்பாடுபண்ணுங்கோ" என்று அம்மா சொல்லும்பொழுது அப்பா தமக்கே உரித்தான நிதான தன்மையில் "எல்லாம் காலம் வந்தால் தானுக முடியும்" என்று கூறுவார்.

ஒருதினம் என்னுடைய தமக்கையைப் பார்ப்பதற்காக ஒருவரன் வருவதாகவும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தார்கள். அம்மாவேண்டிக் கொள்ளாத தெய்வம் இல்லை. கமலியை அலங்கரிப்பதில் அக்கறைகொண்டிருந்தாள் நான் அடுக்களையில் டிபன்தயாரித்துக் கொண்டிருந்தேன். சகலவித அலங்கார பூர்ணமாக கமலி வந்தவர்களை நமஸ்காரம் செய்து விட்டு வீணையை மீட்டி பாடத் தொடங்கினுள். அந்த வேளையில நான் வெறுமனே உள்ளே அடைந்து கிடக்கக்கூடாதா! அக்காவிற்கு வந்திருக்கும் வரனைப் பார்க்க வேண்டுமென்ற உணர்ச்சி கழுத்தைப் பிடித்துத் தள்ள, வெளியே எட்டிப் பார்த்தேன். அதேசமயம் அவரும் என் பக்கம்தானு திரும்பவேண்டும்! வைத்த கண் மாருது ஒரு பார்வை!! சென்றவர் சொல்லியனுப்பிய பதில்தான் எனக்கு பெரும் அவஸ்தையைக் கொடுத்தது. "மூத்தபெண் வேண்டாமென்றும், இளைய பெண் என்ருல் கல்யாணம் செய்துகொள்ள சம்மதம்" என்று சொல்லியனுப்பினுர். இதைக்கேட்ட ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய்க் கவலைப்பட்டுக்கொண்டார்கள். என் தமக்கைக்கு இல்லாத அழகை ஒரவஞ்சகமாக கடவுள் எனக்குமட்டும் ஏன்கொடுத்தார்! நானும் அவளைப்போலவேஇருந்திருக்கக்கூடாதா!! என்று கவலைப்பட்டு, என் தமக்கையின் மணத்திற்கு இறைவனை வழிபட்டுக்கொண்டேன்.

காலப்போக்கில் கமலியின்கல்யாணம்முடிந்தது. அவளுடைய கணவர் சம்பந்தமூர்த்தி மணம் முடிந்தபின்தான் என்னைப்பார்த்தார்...ஒரு பெருமூச்சுவிட்டார்! ஆம், என்னை முன்னமையே பார்த்திருந்தால் அவளைக் கல்யாணம் செய்துகொண்டிருக்க மாட்டேனே என்று கூறுவது போல்தோன்றியது அவர்பார்வை சீக்கிரமே சென்னையில் வேலையானதால் கமலியைக் கூட்டிக் கொண்டுசென்றுவிட்டார். எஞ்சிநிற்பது நான்தான்!

என் அழகு, லட்சணம் இவைகளைப் பார்த்த எந்த வரனும் என்னை மணக்க தயாராகி வருவார் என்று கனவு கண்டேன். என்னைப் பார்க்க வந்த முதல் வரனுக்கே மனைவியாகிவிடுவேன் என்று எண்ணினேன். ஆனால் நடந்தது என்ன! "இந்தத் தளுக்கும், மினுக்கும் உள்ள பெண்ணைக் கட்டிக்கொண்டால், நான்தான் இருவருக்கும்சேர்த்து சமைத்துப் போட்டுக்கொண்டிருக்கவேண்டும்" என்று வரனின் தாயார்சொல்கையில் இருதயமே விண்டுவிடும்போலிருந்தது. இப்படியாகப் பலவிதமாய் ஜாதகம் பொருத்தமில்லை, வாரத்திலுள்ள அத்தனை நாட்களின் தோஷங்களும் என்னைச் சூழ்ந்துகொண்டிருப்பதாக சொல்லி என்னை நிராகரித்துச் சென்றனர்.

கடைசியில் என்னுடையமணமும் நிறைவேறியது. என்னைப் பார்த்தவுடனேயே அவருக்குப் பிடித்துவிட்டது. ஏதோ வீட்டிற்கு ஒருபெண் இருக்கவேண்டுமென்று விரும்பும் ரகத்தைச் சேர்ந்தவர். அவருக்கு என்னைப் போன்ற அழகி கிடைத்தது தன்னுடைய அதிர்ஷ்டம் என்றுதான் கூறினர். ஆனல் அந்த அதிர்ஷ்டத்தை வீட்டிலேயே அடைத்து வைத்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணுகிறார். யாராவது அவருடைய நண்பர்கள் இரண்டு நாள் தொடர்ந்து பார்க்கவந்துவிட்டால் போதும் அவர்மனம் என்ன பாடுபடுமோ! என்னுடைய வாழ்வில் துன்பத்தின் நிழல் விழ ஆரம்பித்தது. அந்தி நேரம் நெருங்க நெருங்க நிழலின் உருவம் நீண்டுகொண்டே செல்வதுபோல் நாட்கள் செல்லச் செல்ல எங்களிடையே புரியாத ஒரு நிழல் வளர்ந்தும் குறுகிக்கொண்டும் வந்தது.

ஒருதடவை இருவரும்சினிமா சென்றிருந்தோம். இருவரும் பக்கத்தில் அமர்ந்து யாவரும் அதிசயிக்கும்படி இருந்தோம். அங்கிருந்த இருவர் பேசிக் கொண்டிருந்தது எங்களுக்கு நன்றாய்க் கேட்டுக்கொண்டிருந்தது. பாழாய்ப்போன நான் அந்தச்சமயத்தில் ஏன் சிரித்துத் தொலைத்தேனே? நான்ஒன்றை நினைத்துச் சிரித்தால் இவர் வேறொன்றைக் கற்பனை செய்து மனம் கலங்குகிறார். அங்கிருந்தவர்கள் பேசிக்கொண்டது இது

தான்! சினிமாத் தியேட்டருக்கு வந்திருந்த அத்தனை பேர்களையும் பற்றிய தீர்ப்புகளை வழங்கிக்கொண்டிருந்தார்கள் இலவசமாக. "அதோ பார் என்னபொருத்தமான ஜோடி" என்றும், அவள் சரியில்லை என்று கூறிக்கொண்டு எங்கள் பக்கம் பார்த்து "அதோ அவனுக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்தைப் பார்த்தாயா. அவன்இருக்கும் லட்சணத்திற்கு கிளிபோன்ற அவள் எப்படித்தான் கிடைத்தாளோ. கொஞ்சமாவது பொருத்தம்வேண்டாமா?" என்று கூறினார்கள். இல்லற வாழ்வின் இன்பம் இருவரும் அழகுடையவர்களாய் இருப்பதிலா அடங்கியிருக்கிறது. ஒருவரையொருவர் இதயபூர்வமாகஏற்று அன்பு வாழ்க்கை நடத்துவதிலல்லவா இருக்கிறது. எங்களிருவர் பொருத்தத்தை இவர்கள் என்ன அறிவார்கள். இப்படி வருவோர் போவோர்களை காரண காரியமில்லாமல் எடைபோடும் ஆசாமிகளும் இருக்கிறார்களே" என்று நினைக்கையிலேயே தானாக சிரித்துவிட்டேன். இது அவர் மனதிற்கு ஏதோ நான் குத்தலாகச் சிரித்ததாக குதர்க்கமாக எண்ணிக்கொண்டார்.

அன்றையிலிருந்து எங்களுடைய சினிமாவிஜயத்திற்கு முற்றுப்புள்ளி விழுந்தது. அதுமட்டுமல்ல வெளியே எனக்கு புடவை வாங்குவதிலிருந்து அன்றாட வீட்டுச் சாமான்கள் வாங்குவதுவரை அவரே கவனித்துவந்தார். தானே கிணற்றில் ஜலம் இறைத்து உள்ளே கொண்டு நிரப்புவார். யாராவது நண்பர்கள் அவரைத் தேடி வீட்டிற்குவந்தால் அவருடன் பேச்சிக்கொடுத்துக்கொண்டே, வெளியே காபி சாப்பிட்டுவரலாமென்று கூட்டிப்போய் வழியனுப்பிவிட்டு வருவார். இப்படியே எத்தனைநாட்களுக்குத்தான் அவரால்முடியும். என்னை அடைந்ததில் பெருமை கொள்பவர், உள்ளம், உடமை, உரிமையோடு நான் அவரோடு இருந்தும், உலகின்மேல் என் பொருமை கொள்கிறாரோ தெரியவில்லை. எனக்கும் வெளியே சென்று நாலுஇடங்களுக்குச்செல்ல வேண்டுமென்ற ஆசை இருக்காதாவென்று உணரமாட்டாராவென்று ஏங்கினேன். அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் இவரைப்பற்றிக் கேலியாகப் பேசிச் சிரிப்பதைப் பார்த்தால் நாக்கைப்பிடுங்கிக்கொண்டு சாகலாமென்று இருந்தது.

இந்தச்சந்தர்ப்பத்தில்தான் கமலி தன் கணவனுக்கு மாற்றலாகி பக்கத்து வீட்டிலேயே குடிவந்தாள். அதில்தான் வந்தது வினை. அவளைப் பார்க்கச் செல்வதற்குக்கூட தடை செய்து பார்த்தார். எங்க

ளுக்குக் கல்யாணமான புதிதில் அத்திம்பேர் கூறியவைகளையெல்லாம் இவரிடம் என் சொல்லித் தொலைத்தேனே! அப்பொழுது ஒன்றாக எண்ணி மகிழ்ந்தார். இப்பொழுது அனைத்தையும் வேம்பாக உணர்கிறார். இயற்கையிலேயே கமலியின் கணவர் கேலியாகவும், கிண்டலாகவும், வேடிக்கையாகவும் எதாவது பேசிக்கொண்டே இருப்பார். இவர்சொல்லையும் மீறி கமலியின் வீட்டிற்கு நித்தம் ஒருதடவையாவது சென்றுவருவேன்.

ஒருநாள் ஞாயிற்றுக்கிழமையன்று கமலியிடமிருந்து தயிர் வாங்கிவரலாமென்று சென்றேன். அச்சமயம் அவளும் எங்கோ வெளியில் சென்றிருந்தாள். அத்திம்பேர் மட்டும் இருந்தார். அவரோடு சிறிதுபேசிக்கொண்டிருந்தேன். திடீரென்று இவர் பிரசன்னமாயிருந்தார் "நன்றாய் இருக்கிறது உங்களுடைய நாடகம். அக்காவிற்குப்பதில் அத்திம்பேரிடம் கொஞ்சிகிறாப்போல் இருக்கிறது" என்று இரைந்தார். "இந்தா சாரு உன்னோடு என்னால் குடிததனம்பண்ண முடியாது" என கூறினார். கமலியாவது என் சார்பில் இருப்பாள் என்று எண்ணினேன். ஆனால் அவன் சொன்னவை என்னை நிலைகுலையச் செய்தது. ஆதிமுதல் என்னைப்பற்றி அவன் எண்ணிக்கொண்டிருந்தது என்னவென்று அறிந்தேன். "அந்தக் காலத்தில் உன்னால்தான் என் கல்யாணம் பலதடவைதடைப்பட்டது. அழகாய் இருந்தால் அதற்கு இவ்வளவுஅமர்க்களம் கூடாது. என்ன இருந்தாலும் நாலுபேருக்குப்பயந்துதான் இருக்கவேண்டும்" என்று கூறினான். அவனுக்கு என்னபதில் சொல்லுவதென்றே புரியவில்லை.

அப்பொழுதுதான் இந்த விவாகரத்து மசோதா காரசாரமாக பார்லிமெண்டில் விவாதிக்கப்பட்டது. அசன் பிரதிபலிப்பு என்வாழ்க்கையில் எற்பட்டது. விவாகரத்திற்கு மனுச்செய்தார். அவருடைய எண்ணத்திற்கு மாறாக எதையும்செய்ய, சொல்லவிரும்பவில்லை. என்னுடைய ஜீவனாம்சத்திற்கு மாதர்தோறும் நாற்பது ரூபாய் கொடுக்க ஒத்துக்கொண்டார். வாழ்வில் நான் இப்பொழுது தனிமரம்! வாழாவெட்டி!! கணவன் இருந்தும் கன்னி!!! இதற்கெல்லாம் மூலகாரணம் என் அழகுதான். நான் என் அழகாய்ப் பிறந்தேன்!

இலங்கை பூராவிற்கும் 'மகிழ்ச்சி'யின் சோல் ஏஜண்டாக நாங்கள் ஏற்றிருக்கிறபடியால் இலங்கையில் சப் ஏஜன்ஸி எடுக்க விரும்புவோர் எங்களுக்கு எழுத வேண்டுகிறோம்.

★

த. தம்பித்துரை—நியூஸ் ஏஜண்ட்,

நெ, 226, ஆஸ்பத்திரி ரோடு, :: யாழ்ப்பாணம். (சிலோன்)

'மகிழ்ச்சி' அழைக்கிறது!

[நா. புகழேந்தி—தூத்துக்குடி.]

மகிழ்ச்சி மகிழ்ச்சி யென்றே!
மனஉறுதியுடன் வாழ்ந்தோ மன்றே!
இகழ்ச்சி ஏற்பட்டதே நம்மினத்தை
இருள் சூழ்ந்ததே யிடையில்,
கரையிலா இன்பக் கடலிலேநாம்
களிப்புடன் மிதந்தோ மன்றே!
வரையிலாபுயல் இடையில் நம்
வாழ்வைப் பறக்கடித்ததே இன்று.
வாழ்ந்தோம் கொடிகட்டி நாட்டில்
வந்தனர் இடையில் சூழ்ச்சியாளர்
தாழ்ந்தோம்அவர் சாத்திரங் கண்டு
தவிக்கின்ருேம் நாடிழந்து இன்றே!
பசிப்பவன் உணவு கண்டுப்
பரவச மடைதல் போல
மகிழ்ச்சியைப் பறிகொடுத்து
மனமதைத் தளரவிட்ட நம்மை
'மகிழ்ச்சி' அழைக்கிறது, மக்களே
வாருங்களென்று, மக்களே!
வாருங்கள் பருகுவோம் மகிழ்ச்சியை
வரியில்லை இதுவே ஓர்மகிழ்ச்சி நமக்கே!

இன்ப அலை

[பி. எஸ். மணியன்]
சின்னணம்பட்டி.

'சமுதாயமென்பது சருக்கு நிலம். சதிக் கிடங்குகளும், சரியற்ற திட்டங்களும் கோர்வையாகி நெளியும் சர்ப்பக் குகை. வைதீகமும், வாழ்வை நம்பாமையும் அக் கொடுஞ் சமூகத்தின் கூரிய கண்கள். சீரிய நோக்கம் கொண்டோரைச் சிதைத்திடும் வாள். பெண்களைப் பதுமைகளாக்கிப்பெருமைகொள்ளும் புயல் தன்மையின் இருப்பிடம். பாலியத்திலேயே, பல்விழுந்தபதியைக் கரம் தழுவச்செய்து பின்பு அவன் இறந்தவுடன் விதவையெனும் பாணத்தை அவள்மீதுவிட்டு வேதனைவிளையாட்டுக் காட்டும் வெறிக்கூச்சலை வெற்றியொலியாகக் கிளப்பும் வேங்கை. அந்த விதவைகள் விம்மி விடுக்கும் கண்ணீரிலே வேடிக்கைத் திவலைகளை வடித்தெடுத்து வாதனையூட்டும் உபாதைக்கூடம். இத்தகைய இழிநிலையிலுள்ள விதவைகளை வாழ்வுப் பந்தத்தில் இணைக்கும் இதுபோன்ற சீர்திருத்த நாடகங்கள் நாட்டிலே நடமாடுவது பெருகவேண்டும்...!'

இந்தவார்த்தைகளை எத்தனையோ முறை இதயத்தடாகத்திலே குமிழியிட விட்டுக்கொண்டாள் சரஸ்வதி. அவள் உலகையறியாப் பிராயத்திலேயே விதவையாக்கப்பட்டவள். விதவைகள் வேடிக்கையும் மகிழ்ச்சியும் மனதிலே உலவவிடக் கூடாதவர்களென்று சமுதாயம் கூறிய போதிலும், அவள் செல்வந்தர் மகளானதால் நாடகம், சினிமாபோன்றவைகளுக்கு அடிக்கடி செல்வதை வழக்கமாகக்கொண்டாள். அவள் அப்பாவும் ஓரளவு முற்போக்கு எண்ணங்கள் அமையப் பெற்றவர். ஆகவே அவர், மணாளனையிழந்த மகள் மற்ற மார்க்கங்கள்மூலமாகவாவது சிறிதளவு மகிழ்ச்சியை வரவழைத்துக்கொள்ளட்டுமெனும் நினைவால் சரஸ்வதியைத் தடைசெய்யாதிருந்துவிட்டார்.

அன்று "விதவையின் கண்ணீர்" எனும் நாடகம் காணச் சென்றிருந்தாள் சரஸ்வதி. தலைப்பிலே கொடுக்கப்பட்ட வாக்கியங்கள் அன்றைய நாடகத்துக்குத் தலைமைதாங்கிய பாண்டியனால் உதிர்க்கப்பட்டவை. அவை வறண்ட சரஸ்வதியின் நெஞ்சுக்கு வெறும் வார்த்தைக்கோர்வையாகமட்டும் தெரியவில்லை, தனது வாழ்வையே படம் பிடித்துக் காட்டுவதாகக் கருதிக்கொண்டாள்.

பாண்டியன் கல்லூரியில் பி. ஏ வகுப்பில் படிக்கும் மாணவன். சீர்திருத்த எண்ணங்கள் சிந்தையில் சிந்து பாடித் திரியும் இளைஞன். சரஸ்வதியின் இல்லம்இருந்த அதே தெருவிலேயே அவனும் அறையெடுத்து வசித்துவந்தான். அவன் தினமும் கல்லூரி செல்லும்போது சரஸ்வதியின் கண்கள் ஜன்னலின் வழியாக அவனைக் கவனிக்கத் தவறாது. அன்று நாடகத்தில் அவனது வீர உரைகளைக் கேட்டதிலிருந்து அவளது மனதில் பாண்டியனின் உருவம் மின்னஆரம்பித்தது. அந்த மின்னலிலே தனது இருண்டவாழ்வை உருண்டோடச் செய்யும் அன்பொளிபடருவதாகக்கற்பனைசெய்து கொண்டாள்.

ஜன்னல்வழியாக மறைந்துநின்று பார்ப்பதை விட்டு வாசலிலேயே வந்துநிற்க ஆரம்பித்தாள். கையிலே புத்தகத்தையேந்தி அவன் செல்கையிலே காளையின் கம்பீர நடையையும், நண்பர்களுடன் சிரித்துப்பேசி போகும்போதுசிந்தையைத்தொடும் கவிதையின்பத்தையும், அவள் கண்கள் அவனை நோக்கிச் சுழன்று ஓய்ந்து திரும்பும்போது பாசஒளிப்படர்ச்சியையும், காணத் துவங்கிக் களிப்பையும் வரவழைத்துக்கொண்டாள் சரஸ்வதி. கண்களின் சந்திப்பிலேயே காலம் கடந்துகொண்டிருந்தது.

அன்று மாலை. மாடியிலிருந்த சரஸ்வதியை அப்பாவின் குரல் அழைத்தது. கீழேஇறங்கிச்சென்ற அவளது கண்கள் ஆச்சரியத்தால் மருண்டன. எவனது அழகுருவிலே தனது எதிர்காலத்தை வாழ்க்கை மாளிகையாகக் கற்பனையில் சிருஷ்டித்தாளோ அவனும் அப்பாவின் அருகிலே அமர்ந்திருந்தான். "காப்பி கொண்டுவாம்மா" என்றார் அப்பா. உள்ளே சென்று இரண்டு டம்ளர்களில்காபியெடுத்துக்கொண்டு திரும்பினாள்.

அவர்களிருவரும் நாடகத்தையும், கலையையும்பற்றி நீண்டநேரம் உரையாடிக்கொண்டிருந்தார்கள். பின்பு பாண்டியன் விடைபெற்றுச்சென்றுவிட்டான். அடிக்கடி வா தம்பி யெனும் வார்த்தைகளை அப்பா முடிவுரையாகப் போட்டார். அந்த உரை அவளது இதயச்சோலையில் இனிய தென்றலை உலவவிடுவது போலிருந்தது. அன்றைய இரவு முழுவதும் அவனது கட்டுருவைக் கற்பனையிலும், கனவிலும் வடித்தெடுத்துக்கொண்டிருந்தாள்.

அதற்குப் பிறகு பாண்டியன் சரஸ்வதியின்வீட்டுக்குச் செல்வதும் அவளது அப்பாவுடன் வெகுநேரம் வார்த்தையாடுவதும் வாடிக்கையாயிற்று. அவனது நெஞ்ச ஓடையிலும் சரஸ்வதி ஆசை அன்னமாகப் பவனிவர ஆரம்பித்தாள்.

பாண்டியன் கல்லூரியில் எத்தனையோவிதமான பெண்களைப் பார்த்திருக்கிறான். கல்லூரியென்பதே கட்டழகமைந்த கன்னியரின் கூட்டுருவம்தானே! குழைவாகப் பேசிக் கருத்தைக் குத்தும் காரிகைகள், குறும்பாகப் பார்த்து நெஞ்சைக் கலக்கும் வேல்விழியாள்கள், சிரிப்பைச் சிந்தி சிந்தையைச் சிற்றின்பக்கூடமாக்கும் சரசிகள், சிவந்த முகத்தைக் கோபமாகக் காட்டி மனதைச் சிதைக்கும் மங்கைகள் ஆகியவர்களிடமெல்லாம் காணப்படாததோர் கவர்ச்சியை சரஸ்வதியின் உருவத்திலே உற்பத்திசெய்து பார்த்து உவகையின் உச்சியை அடைய எண்ணினான்.

வழக்கம்போல் சரஸ்வதியின்வீட்டுக்குச் சென்ற அவன் அன்று தனிமையில் அவளைச் சந்திக்கநேர்ந்தது. "அப்பா எங்கே" என்றான்.

"அவசரமாக மாலையில் எங்கோ சென்றார், நாளைதான் திரும்புவார்" இதைச் சொல்வதற்குள் அவள் இதயம் பட்டபாடு......

"சரி சென்றுவருகிறேன்" பிரியமில்லாததொரு காரியத்தைச் செய்வதுபோல அவன் வெளியிட்ட வார்த்தைகள்.

"சற்று இ...ருங்...கள்" சிரமத்தோடு சொன்னாள் அவள். அவனைப்பற்றி அவள் எழுப்பியிருந்த, கற்பனையில் உருவாகியிருந்த எண்

ணற்ற வர்ணனைகளில் எதுவுமே அவள் வாயினின்றும் வெளிவர மறுத்தன. அந்த நேரத்தில் இருவர் இதயங்களிலும் உற்பத்தியான போராட்ட அலைகள்... இருவரது இணைப்புக்கும் வழி வகுத்துக்கொடுத்தன. சமுதாயம் விதவைக்கூண்டைச் சுற்றிப் போட்டிருந்த கற்பாகியகம்பியை பொங்கியெழுந்த அவளின் நெஞ்சக் குமுறல் ஒடித்து நொறுக்கியது. மகிழ்ச்சிவீதியிலே பறந்து வட்டமிடும், கூண்டினின்று மீண்ட கிளியானாள்.

அதன்பின்பு பாண்டியன் சரஸ்வதியைக் காணச் செல்வதெல்லாம் அவளது அப்பா வீட்டிலில்லாத நேரத்தில்தான். எங்காவது பாண்டியனைக் காண நேரும்போது என்னதம்பி வீட்டுக்கே வரமாட்டேனென்கிறாயே எனக்கேட்பார். தேர்வு நெருங்குவதால் படிக்க வேண்டியது நிறைய இருக்கிறது என்பதைப் போட்டுவைப்பான். அவருக்கு எங்கே தெரியப்போகிறது அவரில்லாதபோதெல்லாம் அவனும் அவளும் அணைப்புப் பாதை வழியே ஆசைக்குன்றின் உச்சியை எட்டி அன்பு உலவலில் திளைக்கிறார்களென்பதெல்லாம்!

"அத்தான்! தங்களின்வருகையால் என் வாழ்வே மலர்ந்தது" என்றாள் ஓர்தினம்.

"உன் கூட்டுறவால் எனது கருத்து குதூகல முழக்கமாகிறது சரசு!"

"இந்த அன்பு என்றும் மாறாதே அத்தான்?"

"உன் பனிப் பார்வைக்குப் பலியான நெஞ்சைத்தான் பதில் கேட்கவேண்டும் கண்ணே!"

"நான் விதவையென்பதை மறந்துவிட்டீர்களா அன்பரே?"

"என் மனம் என்னிடமிருந்தாலல்லவா சரசு நான் மறப்பதற்கு, அதை நீதானே பிடுங்கிக் கொண்டாய்!"

"சமுதாயம் விதவைகளை வாழாவெட்டியாகவே நினைக்கிறதே அத்தான்!"

"சஞ்சலக்காரர்களின் சூழ்ச்சிப் பின்னலிலே சமைந்தது தானே சரசு சமுதாயம்! விதவையெனும் மூன்றெழுத்துக் கொடூரம் இந்நாட்டினின்றும் ஒழிய வாழ்வையே பலிகொடுக்கத் துணிந்த நானா சமுதாயத்தின் சதிவலையிலே சிக்குவேன்?"

"இந்த எண்ணம் எப்பொழுதுமிருந்தால் நான் பாக்கியசாலியே" இவ்வார்த்தையைக் கூறும்போது நம்பிக்கை அவளதுமுகத்திலே புன்னகையாக நர்த்தனமிட்டுக்கொண்டிருந்தது.

மூன்று மாதங்களின் பின்பு அவனது அப்பாவிடமிருந்து வந்தகடிதத்தில் உடனேஊருக்கு வருமாறு கண்டிருந்தது. தகப்பனாரின் விருப்பத்தைத் தளிர் மேனியாளிடம்கூறிவிட்டு விரைவில் திரும்புவதாக வாக்களித்து ஊர்சென்றான். அப்பா வர

வழைத்ததின் காரணமென்ன வெனும் எண்ணப் பின்னலை விடுவிக்கமுடியாத நிலையிலேயே ஊரை எட்டினான்.

'பாண்டி! உன் கல்யாணத்துக்கு ஏற்பாடுசெய்திருக்கிறது' என்றார் அப்பா. 'ஆமா தம்பி உன் மாமாமகள் சரோஜாவைத் தான் தெரிந்தெடுத்திருக்கிறோ' மெனப் பின்னணி இசைத்தாள் அம்மா. அவனது உள்ளம் போராட்டச்சுழலிலே சிக்கியது. இறுதியில் மனதில் உள்ளதை மறைக்காது சொல்லிவிடுவதெனத் தீர்மானித்தான்.

"அப்பா! நான் சரஸ்வதியெனும் விதவைப் பெண்ணைக் காதலிக்கும் நிலையேற்பட்டது. அவளையே மணம் செய்வதென்னும் முடிவுக்கு வந்துவிட்டேன். என்து சீர்திருத்த நினைவுகளைச் செயலில் நிறைவேற்றுவதற்குத் தக்க வாய்ப்பாகவே கருதுகின்றேன்"

அப்பாவின் முகம் கோபத்தால் சிவந்தது. "உன் வாழ்வு நல்வழியில் செல்லவேண்டுமென்பதற்காகத்தானேடா உன்னைப் பள்ளிக்கு அனுப்பினேன். வாழாவெட்டியை மணம் செய்யப்போகிறானும் வெட்டிப்பயல்! நீ சரோஜாவைக் கலியாணம் செய்யாவிட்டால் இந்த வீட்டுக்கும் சொத்துக்கும் உரியவனல்ல. அதோடுமட்டுமில்லை, நீ அடுத்த தடவை திரும்பும்போது என் சவத்தைத்தான் காண நேரிடும்.

எழுத்தாளர்களுக்கு

கதை, கட்டுரை, கவிதை முதலிய எது அனுப்பினாலும் உடன் ஸ்டாம்பு, ரிப்ளேகார்டு அனுப்பவேண்டாம். திரும்ப அனுப்பப்பட மாட்டாது. பதிலும் எழுதப்படமாட்டாது.

நீ செய்யப்போகும் அவமானம் நிச்சயமாக என் உயிரை உறிஞ்சிவிடும்" கோபத்தோடு வெளிவந்த இவ்வார்த்தைகளில் ஏக்கமும் பிரதிபலித்தது. பாண்டியனின் நெஞ்சமும் குழப்பத்துக்குள்ளானது. அம்மாவின் முகத்தைப் பார்த்தான். அது கண்ணீர்க்குளமாகக்காட்சியளித்தது.

அப்பாவின் கவலையும் அம்மாவின் கண்ணீரும், விதவையின் கண்ணீரை மறைக்கும் திரைகளாயின. சரோஜாவுக்கும் பாண்டியனுக்கும் பெற்றோர்களின்பேராதரவுக்கிடையேமணம் முடிந்தது.

அவனது உள்ளத்தில் ஆசையைக் கண்டு நேசத்தை நாடிச் சென்ற சரஸ்வதி அவனை எதிர்பார்த்து ஏமாற்றத்தையே இறுதிப் பயனாகப் பெற்றாள். விதவை வடிக்கும் கண்ணீர்க்கடலிலே பாண்டியன் போன்றவர்கள் இன்ப அலையை சிறிது காலம் தான் ஆரவாரிக்க விடுகிறார்களே யொழிய, என்றும் நிரந்தர அலை எழுப்புவதுபற்றிச் சிந்திப்பதேயில்லை. ★

இது நிஜமா?

[வாகன்]

காதல்

காதல் என்பது கல்லூரிகளில் அகப்படும் கள்ளச் சாராயம். எவ்வளவுதான் பெற்றோர்களும், அதிகாரிகளும் கண்களில் விளக்கெண்ணெய் விட்டுக்கொண்டு பார்த்தாலும் கண்டுபிடிக்கச் சிரமப்படுகிறது.

—ஒரு மதுவிலக்கு அதிகாரி

லேபிள்

'அபாயம், விஷம்' என்று குறிப்பிட்ட லேபிள்களை ஒட்டி அலாதியாகவை' என்று அடிக்கடி ஞாபகப்படுத்தலாம். ஆண்—பெண் கூட்டுப்பள்ளிகளிலே, 'ஒதுங்கிப் போங்கள்' என்றுதான் எச்சரிக்கலாம்.

—ஒரு டாக்டர்

பெருமை

அத்தர் பாட்டிலை மூடி வை; இல்லையேல், நல்ல விலைக்குப் போகாது. வாலிபத்தில் 'காதல், காதல்' என்று அலைந்தால் தாம்பத்திய வாழ்வு ஒற்றுமையுடன் பெருமைப்படாது.

—ஒரு செண்ட் வியாபாரி

கரை ஏறுதல்

காதல் — கடல்; காதலர்கள் என்கின்ற மீன்களை கரையேற்றினால் மூச்சுவிடத் திணறி துடிக்கின்றன.

—ஒரு செம்படவன்

பெருக்கம்

சட்டமும்காதலும் பெருகியே வருகின்றன; ஆனால், சிறைச்சாலைகள் குறைவுபடக் காணோம்.

—ஒரு நீதிபதி

பொக்கிஷம்

சாவியில்லாத பூட்டுகள் விசித்திரமாகவும் விநோதமாகவுமிருப்பினும் திருடுபோய்விடுமோ என பயப்பட வேண்டியதாகவேயிருக்கிறது. பெண் — பொக்கிஷம்; அதுகணவனுக்குத்தான் தெரியும்

—ஒரு காஷியர்

உத்தமி

'தூரத்தில் போய் சன்னமாக ஊது, பக்கத்தில் வந்து பலக்க ஊது' என்று இராகங்களுக்குத் தக்க நாதஸ்வரக்காரன் ஒத்துக்காரனுக்கு அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கமுடியுமா? 'அப்படிப்போ, இப்படி வா' என்று கணவன் மனைவிக்கு சொல்லிக்கொண்டேயிருக்க முடியுமா? அறிந்து நடக்கிறவள் உத்தமி.

—ஒரு நாதஸ்வர வித்வான்

நாகரீகம்

காதல் நாகரீகத்தின் அளவுகோல்! திடீரென்று பாதரசம் கீழே இறங்கிவிட்டால் புயலை எதிர்பார்க்கலாம்.

—ஒரு சயின்ஸ் ஆசிரியர்

[தீபாவளியின்போது வெளிவரும் புதுப்படங்கள் குறித்து, வரும் இதழுக்குச் சுருக்கமான விமர்சனத்தை நேயர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.]

விஜயாவின்

கல்யாணம் பண்ணிப்பார்

(மு. புரட்சிப்பித்தன், மதுரை)

அர்த்தமற்ற சாஸ்திரங்களுக்கும், அறிவுக்குப் பொருந்தாத சம்பிரதாயங்களுக்கும் அடிமைப்பட்டு, சாதிமதப் பூசல்களால் புரையோடிப்போன—ஏற்றத் தாழ்வு தலைவிரித்தாடும் சமுதாயத்தில், வைதீகத்தின் வஞ்சகக் கண்டுபிடிப்பான 'வரதட்சணை'யால் விளையும் கொடுமைகளைக் கூறுகிறது இப்படம். ஆனால் நகைச்சுவை அம்சத்திற்கு முக்கியத்வம் அளித்து, அதற்கேற்றபடி சம்பவங்கள் அமைக்கப்பட்டிருப்பதால் இக் கருத்து மக்களின் கவனத்தில் வலுப் பெற முடியாமல் சிதறடிக்கப்படுகிறது.

கண்ணம்மாவின் குடும்பத்தில் தரித்திர தேவதை தஞ்சம் புகுந்திருந்தாள். கண்ணம்மா மகள் அம்மணிக்கு 'மணமகன்'தேடும் படலத்தில் இறங்குகிறான் சகோதரன் ராஜு. ஆனால் எதிர்பாராதவிதமாக தணிகாசலத்தைச் சந்திக்க நேரிட்ட ராஜு அவருடைய மகள் சாவித்திரியை திருமணம் செய்துகொள்ளவேண்டிய நிர்ப்பந்தமான நிலை நேரிடுகிறது.

பின்னர் தணிகாசலத்தின் உதவியால், அம்மணிக்கும் அழகாபுரி வேலாயுதத்தின் மகன் வழக்கறிஞன் ரமணிக்கும் கல்யாணம் நடைபெறுகிறது. வாக்களித்தபடி வேலாயுதத்திற்கு வரதட்சணை அளிக்கப்படாததால் திருமணம் பாதியிலேயே தடைப்பட்டுவிடுகிறது.

அவமானம் தாங்க முடியாத அம்மணி தற்கொலை செய்து கொள்ள எத்தனிக்கும் சமயம், தக்க தருணத்தில் தடுக்கப்படுகிறாள். சகோதரன் ராஜு அம்மணியின் கணவன் ரமணியிடம் நிலைமையை விளக்குகிறான்.

நேர்மை உள்ளமுள்ள ரமணி, தந்தையிடம் சென்னைக்கு செல்வதாக கூறிவிட்டு, அம்மணியின் கிராமத்திற்கு வந்து அவளையும் அழைத்துக்கொண்டு சென்னை சேருகிறான்.

தன்மகளை ராஜுவுக்கு மணம் செய்விக்க வேண்டும் என்று எண்ணி ஏமாற்றம் அடைந்த கோவிந்தய்யா, பொருமையா

வேலாயுதத்திடம்சென்று ரமணி யின் செய்கையைக் கூறுகிருன்.

உடனே சென்னைக்குப் புறப் படுகின்றனர் இருவரும். செய் தியறிந்த ரமணி பைத்தியம் பிடித்தவன் போலவும், ராஜு டாக்டராகவும், அம்மணி நர்ஸா கவும் நடிக்கின்றனர். ஆனல் இறுதியில் ரகசியம் அம்பல மாவதுடன், ரமணி தந்தையை எதிர்த்து வெளியேறுகிறன். தணிகாசலத்தின் ஏற்பாடுகளால் அவமானமடைந்த வேலாயுதம் தன் தவறைஉணர்ந்து திருந்துகி ருர். எல்லாம் நலமாகமுடிகிறது

'விஜயா புரொடக்ஷன்ஸ்' நிர் வாகிகளில் ஒருவரான திரு. சக்ரபாணி அவர்களால் இக்கதை எழுதப்பட்டுள்ளது. கற்பனை உருவில் நடமாடும் கதாபாத்தி ரங்கள்—கதை அமைக்கப்பட்டி ருக்கும் தன்மை—இவற்றைச் சற்று கருத்தூன்றி கவனிக்கும் போது திரு. சக்ரபாணியைச் சிறந்த கதாசிரியர் என குறிப்பிட இயலாது. ஏராளமான சம்பவங் களைக் கொண்டுள்ள இக்கதை ஒரே குழப்பமாக இருக்கிறது. நகைச்சுவை அம்சத்திற்கு முக் கியத்துவம்தரப்பட்டிருந்தாலும், நம்பத்தகாத அசம்பாவிதமான நிகழ்ச்சிகள் படத்தில் மலிந்து காணப்படுவதால் கதையின்மூலக் கருத்து—குறிக்கோள்உருத்தெரி யாது சிதைந்துவிடுகிறது.

கதாபாத்திரங்கள் இயற்கைக் கு விரோதமாக கற்பனைசெய்யப் பட்டுள்ளனர். நம்நாட்டில் இன் றைய சூழ்நிலையில் வந்தோருக்கு எல்லாம் வாரியளிக்கும் வள்ளல் தணிகாசலம் போன்றவர்களை கதையில்கூட காண்பது அரிது. பங்களா வாசம்—படாடோபத் தின் அணைப்பு—இட்டதைச் செய்ய எடுபிடி ஆட்கள் அத்தனை வசதியும் இருக்கின்றன தணிகா சலத்திற்கு. ஆனல் வரதட்சணை யளிக்க வகையின்றி அவமானப் படுகிருர் என்பது நம்பமுடியாத கற்பனை; 'புராணப் புளுகுகளை' விட ஒருபடி மேலே போகிறது.

ராஜுவின் குணநலன்கள் சரி வர சித்தரிக்கப்படவில்லை. ஆரம் பத்தில் ஒன்றுமேதெரியாத சிறு வனைப்போலவும், பின்னர் சிந் தித்து செயலாற்றும் புத்திசாலி யாகவும்திருந்திவிடுகிருன். படித் துப் பல்கலைக்கழகம் பட்டம் பெற்று, வழக்கறிஞனுக வாழ வேண்டிய ரமணி, இருபதாம் நூற்ருண்டில்தந்தைக்குப்பயந்து வாழ்க்கை நடத்துவதும், ஆனல் இறுதியில் (கதைமுடிவதற்காக) தந்தையை எதிர்த்து வெளியேறு வதாக காட்டப்படுவதும் கதாசி ரியரின் கற்பனைக்குறைவை புலப் படுத்துகிறது. சிறுவர்களின் காதல்களியாட்டங்கள் அளவுக்கு மீறி வளர்த்தப்பட்டுள்ளது.

இப்படத்தின் வசனங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது "ஓர் இரவு" படத்தில் பாடப்பட்ட "தாய் மொழியைக் கதம்பம் பண்ணும் சண்டாளநாடு" என்ற

பாடல்தான் என் நினைவில் நின்றது. விஜயாவின் முந்தியவெளியான 'பாதாளபைரவி'யில் 'அக்காடி' 'அம்மாடி' போன்ற பதங்களைப் பிரயோகித்து தமிழ் மொழியைச் சின்னாபின்னம் செய்த தஞ்சை ராமையாதாஸ் இப்படத்தில். வசனங்களிலும் பாடல்களிலும் வரம்புமீறி வடசொற்களை வாரி இறைத்திருக்கிறார். தனித்தமிழில் தயாரிக்கப்படும் படத்தில்கூட பிறமொழி கலப்பில்லாத தூய தமிழ்வசனங்களைக் கேட்க முடியவில்லை. கூடியவரை எளிய நடையில் இருந்தாலும்—தமிழுக்குப் புறம்பான புது சொற்கள் புகுத்தப்பட்டதால், வசனங்களைக் கேட்கும்போது தலைவலியும், தஞ்சை ராமையாதாஸ்மீது ஆத்திரமும் ஏற்படுகிறது.

பாடல்களுக்கு இசையமைக்கும் பொறுப்பை ஏற்று திருப்திகரமாக செய்துமுடித்திருக்கிறார் கண்டசாலா. "யாரோ எவரோ, ஏழுமலை ஆண்டவனே, வாழ்வேது" என்ற மூன்று பாடல்களும் மீண்டும் மீண்டும் கேட்டு இன்புறக்கூடிய இனிமை நிறைந்தவை. தற்கால பெண்டிரையும் பிரம்மாவையும் இடித்துக் காட்டும் நையாண்டிப்பாடல் நன்றாக அமைக்கப்பட்டுள்ளது. தாலாட்டுப் பாட்டுதவிர மற்ற எல்லா இடங்களிலும் ஜி. வரலட்சுமிக்குப் பதில் பி.லீலா குரல்தானம் செய்திருக்கிறார். இதர கலை அம்சங்களைப்பற்றிக் குறைகூறுவதற்கில்லை.

எந்தவித பாகத்தையும் ஏற்று நடிக்கும் ஆற்றல் உண்டு என்பதை இப்படத்தின் மூலம் ஜி. வரலட்சுமி நிரூபித்துவிட்டார். நர்ஸாக நடிக்கும் கட்டம், ராமாயணத்தை ரசிக்கும்காட்சி, கண்ணீர் வடிக்கும் கட்டங்களிலும் திறம்பட நடித்துள்ளார். விஜயா அறிமுகப்படுத்தும் புதுமுகம் சாவித்திரியிடம் சுமாரான நடிப்பும், நல்லமுகவெட்டும் அமைந்திருக்கிறது. வெகுவிரைவில் முன்னணிக்கு வரக்கூடியவர் என்பதற்குரிய அறிகுறிகள் இவரிடம் காணப்படுகின்றன. சிட்டியாக தோன்றும் புஷ்பலதாவின் நடிப்பு மகா மட்டம்! மற்ற நடிகையர் பரவாயில்லை.

கதாநாயகன் ரமணியாகவரும் ராமராவ் நடிப்பு நன்றாக உள்ளது. இறுதிக் கட்டத்தில் உணர்ச்சிகளை உருவகப்படுத்தும் நடிப்பில் வெற்றிபெறவில்லை. தணிகாசலமாகதோன்றும் ரங்காராவ்நடிப்பு ரஸிகர்களால் மறக்க முடியாதது. அடிக்கடி முகத்தைச் சுளிப்பது அவ்வளவு நன்றாக இல்லை.

மட்டரகமான கதையைக் கொண்டு அனைவரும் புரிந்து ரசிக்கும்படி திறமையாக 'டைரக்ட்' செய்திருக்கிறார் பிரசாத். படத்தைப் பார்த்துச் சிரித்துவிட்டு வரவேண்டுமேதவிர சிந்தனைக்கு வேலை தரக்கூடாது.

சினிமா வேண்டுமா? வேண்டாமா? ஏன்?

[நேயர்கள் கருத்து]

சினிமா ஒரு கூரிய வாளொத்தது. அதன் பயன், பயன்படுத்துபவரைப் பொறுத்தது. விஞ்ஞானம் வேண்டுமா வேண்டாமா என்று கேட்டால், 'வானொலி' வேண்டும், ஆனால் 'அணுகுண்டு' வேண்டாம் என்றுதான் பதில் வரும். அதுபோன்றதுதான் சினிமாவும்—வாழ்வு வளம்பெறவும் வழியுண்டு; தாழ்வான இழிந்த எண்ணங்கள் எழவும் வழியுண்டு; உள்ளத்தில் ஆன்ம ஒளிவீசவும்வழியுண்டு; ஆபாச எண்ணங்கள் நெஞ்சில் புகவும் வழியுண்டு. பொதுவாக நன்மையுமுண்டு; தீமையுமுண்டு—எல்லாம் பயன்படுத்துவோரைப் பொறுத்துத்தான்—படத் தயாரிப்பாளர்களைப் பொறுத்தது தான்.

மடமையைக்கொளுத்தி அறிவு வளர்க்கும் சினிமா வேண்டும்; மனிதனை மடையனாக்கும்சினிமா வேண்டாம். நல்ல நல்ல நாகரிகங்களை எடுத்துணர்த்தும் சினிமா வேண்டும்; 'அரையாடை' அநாகரிகத்தைக் காட்டும் சினிமா வேண்டாம். தாய்நாட்டுப் பெருமையை வெளியுலகிற்கெடுத்தோதும் சினிமா வேண்டும்; அயல் நாட்டு ஆபாசத்தைக் 'காப்பி' யடிக்கும் சினிமா வேண்டாம். 'இனக் கவர்ச்சி'யால் இளைஞர்களைப் பித்தர்களாக்கும் சினிமா வேண்டாம்; இளம் உள்ளங்களில் ஆன்மஒளி பரவச்செய்யும் சினிமா வேண்டும்.

ஆ. செல்வரசு, விருதை.

*   *   *   *

விஞ்ஞானத்தினால் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு. தீமையை மட்டும் நாம் எடுத்துக்கொண்டு விஞ்ஞானமே ஒழிய வேண்டும் என்று கூறுவது—எழுதுவது எவ்வளவு அர்த்தமற்றதோ, அதேபோல்தான் சினிமா வேண்டாம் என்பதும்.

சினிமாப் படங்களில் கீழ்த்தர உணர்ச்சியைக் கிளறிவிடக்கூடிய காட்சிகள் இருக்கலாம். தணிக்கைப் போர்டார் அப்படிப்பட்ட காட்சிகளை 'கத்தரிக்கோல்' பிரயோகம்செய்து வெளியிட அனுமதிக்கவேண்டும். இதுதான் முறை.

சினிமா வேண்டும். ஏன்? அலைகளினால் கவலையை மறக்க முடிகிறது. நாள் முழுதும்

26 MAY 1955

உழைத்துவிட்டு—அலுத்த உள்ளத்தோடு மனச் சாந்திக்காக மூன்ருணு கொடுத்து படம் பார்க்கும் தொழிலாளி அந்த மூன்று மணி நேரத்தில் சிறிது கவலையை மறக்கிருன். அவனல் 'ரோல்ஸ் ராய்ஸ்' காரில்சென்று கிண்டிரேஸுக்குப் போக முடியுமா? 'ஐந்து—பத்து' கொடுத்து டிக்கெட் வாங்கி நடனக்கச்சேரிகளை ரசிக்கமுடியுமா? முடியாது.

சினிமா—பணக்காரன் முதல் பஞ்சை வரை எல்லோரையும் சமஇடை போட்டு மனச்சாந்தி தரும் ஒரு பொழுதுபோக்கு மண்டபம். எனவே, சினிமா வேண்டும், வேண்டும், வேண்டும் என்று மும்முறை அழுத்திக் கூறுகிறேன்.

இளஞ்சோழன், மானமதுரை.

* * * *

விசித்திரமான கேள்வி! ஆம்; தெருவுக்கு ஒரு தியேட்டர், வாரத்திற்கு ஒரு புதுப்படம் என்ற அளவுக்கு சினிமா வளர்ந்திருக்கும் இந்த இருபதாம் நூற்ருண்டில் இக்கேள்வி எழுந்தது கண்டு வியப்படைகிறேன். மனிதனின் எண்ணங்களை தூய்மைப்படுத்தி, அறியாமையை போக்கி—அறிவொளி பரப்பி, சிந்தனசக்தியை வளர்த்து நல்லெண்ணங்களையும், நல்லுறவையும் பலப்படுத்தி பகுத்தறிவுப் பணியாற்றச் சிறந்ததொரு சாதனம் சினிமா என்பதை உலக அறிஞர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

எப்படிப்பட்ட கல்வி வேண்டும்?

பிரசுரத்திற்குத் தகுந்ததில் சிறந்த ஒன்றுக்குப் பரிசு ரூபாய் ஒன்று உண்டு. கார்டில் எழுதுவதுதான் கவனிக்கப்படும்.

சமீபத்தில் நம்நாட்டில் சர்வதேசத் திரைப்படவிழா நடைபெற்றதே, இதெல்லாம் எதைக் காட்டுகிறது? சினிமா தேவை என்பதைத்தான்.

பகல் முழுவதும் உழைத்து உள்ளமும், உடலும் சோர்ந்து ஓய்ந்து போனவனுக்கு ஓய்வு தேவைப்படுகிறது. ஓய்வுநேரம் சற்று உல்லாசமாக பயன்படுத்தப்படவேண்டுமானல் குறைந்த செலவில் ஏழை பெறக்கூடிய இன்பம் சினிமாவில்தான் இருக்கிறது. மனிதனிடமிருந்துபிரிக்க முடியாதபடி அவனுடைய அன்ருட வாழ்க்கைத் தேவைகளில் சினிமாவும் ஒன்ருகிவிட்டது.

சினிமாவினல்தான் நாட்டில் கொலை, கொள்ளை பெருகுகின்றன என்பது சிலரின் குற்றச்சாட்டு. இதில் சிறிதளவுகூட நேர்மையோ, உண்மையோ கிடையாது. சரித்திரம்படித்தோருக்குத் தெரியும், பலபல ஆண்டுகளுக்கு முன்பே நம் நாட்டில் ஊரைக் கொள்ளையிட்டு, கொலை புரியும் பிண்டாரிகள், தக்கர்கள் போன்ற கொள்ளைக் கூட்டத்தினர் வாழ்ந்துள்ளனர் என்பது.

சினிமாவினால் ஆபாசம் வளர்வதாக மற்றொரு குற்றச்சாட்டு; ரோஜாவில்கூட முள் இருக்கிறது. சொரிசிரங்கு ஏற்பட்டால் மருத்துவரின் உதவியை நாடவேண்டுமே தவிர, கரங்களை வெட்டிக்கொள்வது பைத்தியக்காரத்தனம். எனவே ஆபாசத்தை அகற்ற சம்பந்தப்பட்டோர் முன்வரட்டும்! வரட்டுத்தனமான பேச்சு அவசியமில்லை! நத்தை வயிற்றில் முத்து இருப்பதை மறக்கக் கூடாது. அதேபோன்று சினிமாவின் நன்மைகளையும் ஒதுக்கக்கூடாது.

மு. புரட்சிப்பித்தன், மதுரை.

* * * *

வாழ்க்கையில் வீழ்ச்சியுற்ற மக்கள் சிறிதுசிறிதாகத் தங்கள் தவறுகளை சினிமாப் படங்களின் உதவியால் உணர்ந்து சிந்தித்து, சிந்திப்பதின் பயனாக, பழமையிலிருந்து விடுபட்டு புதுமைக் கருத்துக்களைப் பெற்று தங்கள் வாழ்க்கையில் முன்னேற வழி வகுக்கின்றனர்.

சினிமாப் படங்களின் மூலம் ஒரு நாட்டு மக்களின் மொழிப்பற்றை அதிகமாக்க முடிகிறது. நாட்டின் முக்கிய தேவைகளான கல்வி, சுகாதாரம் முதலியன வளர்ச்சியுறுகின்றன. விஞ்ஞான அறிவு அபிவிருத்தி அடைகிறது. தொழில்நுணுக்கங்களை அறிந்துகொள்ள முடிகிறது. தொன்றுதொட்டு நடைபெற்று வருகின்ற அரசியல் முறைகளையும் மக்களின் பழக்க வழக்கங்களையும் அறிந்துகொள்ள முடிகிறது. பழமையானபண்பு, கலாச்சாரம் இவற்றிற்கும், தற்போதைய பண்பு, கலாச்சாரம் இவற்றிற்குமுள்ள ஒற்றுமைவேற்றுமைகளை அறிந்துகொள்ள முடிகிறது. அதன் பயனாக பழயனவற்றில் தேவையற்றவைகளை நீக்கி, தேவையானவற்றை காலத்திற்கேற்ப புதுப்பித்துக்கொள்ள முடிகிறது. புத்தகங்களில்படிக்கும் சில விஷயங்களையும், பிற நாட்டைப்பற்றிய விஷயங்களையும் சினிமாப் படக்காட்சிகள் மூலம் கண்டு அறிய முடிகிறது. காலத்திற்கேற்ப வாழவேண்டுமென்பதை அறிந்து, நாகரிகத்தைப் பெருக்கிக்கொள்ள முடிகிறது. இத்தகைய நன்மைகள் பல சினிமாப் படக்காட்சிகளால் ஏற்படுவதால் சினிமாப் படம் ஒவ்வொரு நாட்டிலும் வளர்ச்சியுறவேண்டும்.

வளர்க சினிமாக்கலை!

ச. வீ. ராமகிருஷ்ணன், அழகாபுரி.

பூ உலகில் புகழ்பெற்ற
பூ மார்க் பீடி

G.S. முத்தையா & பிரதர்.
மைலாபுரம்.

ஞாபக சோதனைப் போட்டி 7

[கட்டணம் கிடையாது] முடிவு தேதி: 31–10–52

சரியான விடைக்கு

பரிசு ரூ. 10

ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி அனுப்பினால் பரிசுத் தொகை சமமாகப் பிரித்துக்கொடுக்கப்படும்

வெற்றி பெற்றவர்கள் ஜாபிதாவும் சரியான விடையும் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்

1 — — கி
2 — — நாடு
3 — — — — ரன்
4 ராஜ — — —
5 — — — — வல்லி
6 — ம்ப —
7 — ர் — ச் — ந் — — ன்
8 — — — — காதல்
9 — — — வ —
10 பஞ்சா — — — —

பெயர்..

விலாசம்...

ஊர்.................................... ஜில்லா..................................

போட்டி நிபந்தனைகள்

1 கட்டத்திலுள்ள கோடிட்ட இடங்களைப் பூர்த்திசெய்தால் இதுவரை வெளிவந்துள்ள தமிழ்ப் படங்களின் பெயர்கள் வரும்.

2 முதல் கூப்பன் அச்சுக் கூப்பனிலும், அதன்பின் தனித் தாளிலும் தேவையானவை ஒருவர் எழுதியனுப்பலாம். ஆனால் 100 கூப்பன்களுக்கு ஒரு அச்சுக்கூப்பன்வீதம் எழுதப்படவேண்டும்.

3 எவருமே சரியானவிடை அனுப்பாவிடில், போட்டி ஆசிரியரின் தீர்ப்புப்படி பரிசுத் தொகை பிரித்துக்கொடுக்கப்படும்.

4 31–10–52க்குப்பின் வரும் கூப்பன்கள் நிராகரிக்கப்படும்.

5 உள்ளூர் வாசிகள் நேரில் கொண்டுவந்து கொடுக்கலாம்.

கூப்பன்கள் அனுப்பவேண்டிய விலாசம்:

ஆசிரியர், ஞாபக சோதனைப் போட்டி, மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்.

ஞாபக சோதனைப் போட்டி 6 முடிவு

சரியான விடை

1 குசேலா
2 பாலாமணி
3 சக்திமாயா
4 நீலமலைகைதி
5 கிருஷ்ண பக்தி
6 விகடயோகி
7 அனாதைப்பெண்
8 சந்தனதேவன்
9 தக்ஷயக்ஞம்
10 மன்மத விஜயம்

இப்போட்டிக்கு எவருமே சரியான விடை அனுப்பாததால் போட்டி ஆசிரியரின் தீர்ப்புப்படி கீழ்க்கண்டவர்களுக்கு பரிசுத் தொகை ரூ. 10ம் பிரித்துக்கொடுக்கப்பட்டிருக்கிறது.

முதற் பரிசு (1 தப்புள்ள விடை) ரூ. 2—8—0

P. பழனிச்சாமி, சந்திரசேகர விலாஸ் வாட்ச் கம்பெனி,
81, பஜார், விருதுநகர்.

2வது பரிசு (2 தப்புள்ள விடை) ரூ. 1—8—0

K. ராஜம்மா, 44, லக்ஷிமிபுரம், 6வது தெரு, மதுரை.

3வது பரிசு (3 தப்புள்ள விடை) ரூ. 6—0—0
(தலைக்கு ரூ. 0—12—0 வீதம்)

1 K. T. வேலாயுதம், S/o T. திருமலையப்ப பிள்ளை,
வக்கீல் குமஸ்தா, நடுத்தெரு, கொக்கிரகுளம்.
(திருநெல்வேலி ஜில்லா)
2 S. ராசசேகரன், அண்ணாதுரை நியூஸ்மார்ட், இராஜபாளையம்
3 ஜீவரத்தினம், 8/3, சாயக்காரர் தெரு, விருதுநகர்.
4 இ. ப. அசோகன் c/o ராஜன் பதிப்பகம்,
5, லெக்ஷிமிபுரம், 2வது தெரு, மதுரை.
5 M. கிருஷ்ணம்மாள், A.V.A. காம்பவுண்டு, இராஜபாளையம்.
6 M. கோவிந்தசாமி, டீ கடை, மகாதான தெரு,
மாயவரம். (தஞ்சை ஜில்லா)
7 ச. இஞ்ஞாசிமுத்து, 9/36, ஆர். ஸி. வடக்குத்தெரு, சாத்தூர்.
8 S. N. M. சுப்பையா, 6/3, பெருமாள் கோவில் வடக்குவீதி,
யாழ்ப்பாணம் (சிலோன்)

செந்தமிழ் நாட்டுச் சிறுவர்களுக்கு
திடகாத்திரமளிக்கும்
சிறந்த உணவு எங்கள்

ராஜா பார்லி பிஸ்கட்
ராஜா குளுகோ பிஸ்கட்
ராஜா ஜிஞ்சர்நட் பிஸ்கட்

ஸ்தாபிதம்: 1926

ராஜா பிஸ்கட் கம்பெனி,

115, திண்டுக்கல் ரோடு, மதுரை.

உரிமையாளர்: ஆ. சங்குபிள்ளை.

கிளை: 2, டவுன்ஹால் ரோடு, காலேஜ் ஹவுஸ்,
L. V. ஷண்முகம் பிள்ளை மதுரை.

விருதுநகர் கிளை ஏஜண்ட்:
A. ராமகிருஷ்ணன், 7/321, தெப்பம் மேல்பஜார்.

Regd. No. M. 5483. **MAHILCHI** Oct-Nov. 52.

பீடி சக்ரவர்த்தி த.பி.சொக்கலால்ராம்சேட் பீடி

★ உலகத்தில் மிகப் பிரசித்தி பெற்றதும் ★
★ "பீடிச் சக்கரவர்த்தி" என்று கவர்ண்
மெண்ட் பட்டம் கிடைக்கப்பெற்றதும் ★
★ தங்கமெடல் பரிசு பெற்றதும் ★
★ சோம்பலைப் போக்கி சுறுசுறுப்பு
உண்டாக்குவதும் ★
★ இந்தியா, சிலோன், மலேயா முதலிய ஜலப்
பிரதேச நாடுகளில் பிரக்கியாதி பெற்றதும் ★
★ தினமும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு
தொழில் கொடுப்பதும் ★
★ காரம், குணம், மணம் நிறைந்ததும் ★
★ எங்கும் எப்பொழுதும் கிடைப்பதும் ★

சொக்கலால் ராம்சேட் பீடியே!

புரோப்ரைட்டர்:

T. P. S. ஹரிராம் சேட்,

த. பி. சொக்கலால் ராம்சேட் பீடித் தொழிற்சாலை,

முக்கூடல் P.O. (திருநெல்வேலி ஜில்லா)

ஆசிரியரும், அச்சிட்டு வெளியிடுபவரும் கா. சதானந்தம்,
சதானந்தா அச்சகம், விருதுநகர்.